சபை வெளியீடு--2

ஸ்ரீ குருதத்வ விமர்சம்

ஈசான்ய மடம்
திருவண்ணாமலை.

ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினீ சபையின்
அக்ராசனரும் ஸ்தாபகருமான
பிரஹ்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமணிய அய்யர்
அவர்களால் இயற்றப்பட்டு

ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினீ சபையாரால்
வெளியிடப்பட்டது.
சென்னை.

உரிமையுள்ளது] 1937 [விலை அணா 5

PRINTED AT
THE LIBERTY PRESS,
G. T., MADRAS.

श्री

ललिता महात्रिपुरसुन्दर्यै नमः

॥ ब्रह्मविदाप्नोतिपरम् ॥

चतुर्भुजे चन्द्रकलावतंसे कुचोन्नते कुङ्कुमरागशोणे ।
पुण्ड्रेक्षु पाशाङ्कुशपुष्पवाणहस्ते नमस्ते जगदेकमातः ॥

முகவுரை

இச்சிறு நூலானது சென்னை ஸ்ரீ பிரஹ்மவித்யாவிமர்சினீ ஸபையில் "ஸ்ரீ குருதத்துவம்" என்னும் விஷயத்தைப்பற்றி நடந்த உபந்நியாஸங்களின் ஸாரமாகும். இது, ஸ்ரீ குருவின் உண்மை ஸ்வரூபம் யாது? குரு ஸ்வரூபத்தை நாம் என் விசாரிக்கவேண்டும்? இவ்விசாரத்தால் நாம் அடையும் பயன் என்ன? என்னும் விஷயங்களையும், குரு நாமங்களின் அர்த்தத்தையும் 'குரு தத்துவம் எல்லாத் தத்துவங்களைவிடச் சிறந்தது' என்பதையும், பாரமார்த்திக (தத்துவாதீத) குருவின் ஸ்வரூபத்தையும் முமுக்ஷுக்களுக்கு குருவின் பரம்பரையின் ஞானம் அத்தியாவசியம் என்பதையும், ஸ்ரீ குரு பாதுகா ஸ்வரூபத்தையும் பாதுகா மந்த்ரார்த்தத்தையும், குருவை எங்ஙனம் தியானிக்கவேண்டும் என்பதையும் நன்கு விளக்குகின்றது. ஸ்ரீ வித்யோபாஸகர்களுக்கு ஸ்ரீ குருவைவிடச் சிறந்ததொன்று இல்லை. உபாஸ்யமாயுள்ள பரதேவதையும் ஸ்ரீ குருஸ்வரூபம் தான் என்பது பரம ஸித்தாந்தமாகும். ஆதலால் இச்சிறு நூல் உபாஸகர்களுக்கு மிகப் பயனுள்ளதாயிருக்கும் என்பதில் யாதும் சந்தேகமில்லை. மேற்படி சபையில் நடக்கும் உபந்நியாஸங்களை நேரில் சிரவணம் செய்ய முடியாதவர்களுக்கு அவ்வுபந்நியாஸங்களின் ஸாரமாக, இதைப்போன்ற பல சிறு நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்பது சபையாரின் எண்ணமாகும். ஆகவே இச்சிறு நூலை யாவரும் ஆதரிப்பாரேயாயின், இதைப்போன்று, பல உபந்நியாஸங்களை நூல் வடிவமாக வெளியிடுதற்கு மிகவும் உபயோகமாக விருக்கும்.

இங்ஙனம், விதேயன்,

சென்னை,
14—10—'37.

E. R. கிருஷ்ணஸ்வாமி ஐயர்,
வைஸ் - பிரஸிடெண்ட்,
ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினீ சபை, சென்னை.



பிரஹ்மஸ்ரீ ந. சுப்ரமண்ய அய்யர்

ஸ்ரீ குருபாதுகாப்யாம் நம:

ஸ்ரீ ஹயக்ரீவ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ கணேசாய நம:

ஸ்ரீ குருதத்வ விமர்சம்

குருதத்துவ விமர்சமென்பது "குருவின் வாஸ்தவமான இயல்பை" விசாரித்தலாம். குருவின் உண்மை ஸ்வரூபத்தை நாம் ஏன் விசாரிக்கவேண்டும்? இவ் விசாரணையால் நாம் அடையும் பயன் யாது? என்னும் கேள்விகள் ஒவ்வொருவர் மனத்திலும் எழுவது சகஜமே. 'ப்ரயோஜநமநுத்திஶ்ய நமந்தோபி ப்ரவர்த்ததே" என்பது நியாயம். ஆதலின் உபயோகமின்றிய ஒரு காரியத்தில் எவனும் பிரவர்த்திக்க மாட்டானல்லவா? நம் யாவருக்கும் சுகம் வேண்டும், துக்கம் வேண்டாம் என்னும் எண்ண மிருக்கின்றது. அந்த சுகமும், என்றைக்கும் அழியாததாயு மிருக்கவேண்டு மென்று நினைக்கின்றோம். என்றும் அழியாத நித்திய சுகத்தைத்தான் சாஸ்திரங்கள் மோக்ஷ மென்று கூறுகின்றன. இத்தகைய "நித்தியானந்த ஸ்வரூப மோக்ஷம், தத்துவஞானம், ஆத்மஞானம், பிரஹ்ம ஞானம் என்று கூறப்படும் பிரஹ்ம வித்தையால் தான் ஏற்படும்" என்பது ஸகல சாஸ்திரங்களின் சித்தாந்தமாகும். "தரதி ஶோகம் ஆத்மவித், ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி, ஜ்ஞாநாதேவ து கைவல்யம்" என்பன இதற்குப் பிரமாணங்களாம். ஆகவே தன்னை யறியும் சொரூபமான ஆத்மஞானம் அல்லது பிரஹ்ம வித்தையானது, சற்குருவைச் சரணமடைந்து, அவருக்குத் தன்னிடத்தில் கருணை யுண்டாகும்படி சற்சீடனாய் ஒழுகி,

அவருடைய அநுக்கிரகத்திற்குப் பாத்திரனானவற்கே உண்டாகும் என்பது சாஸ்திர சித்தாந்தமாம்.

"ஆசார்யவாந் புருஷோ வேத" சற்குருவைப் பெற்றவன்தான் பிரஹ்மாபின்னமாய்த் தன்னை யறிகின்றான். ஆதலால் பிரஹ்மாபின்னமாய்த் தன்னை யறிந்து நித்தியாநந்தப் பெருவாழ்வினை யடைதற்குச் சற்குருவின் அடைவு (லாபம்) அத்தியாவசியம். சற்குருவின் லாபத்திற்குக் குரு தத்துவ விமர்சம் இன்றியமையாத தல்லவா? ஆதலின் குரு தத்துவ ஆராய்ச்சியானது மகத்தாகிய பிரயோஜனத்தோடு கூடிய முக்கிய விஷயமென்றும், மனிதப் பிறவியை யடைந்த ஒவ்வொருவரும் ஸ்ரீ குரு தத்துவத்தைப்பற்றி யாராய்வதற்கு உரியரென்றும் ஏற்படுகின்றது.

"தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்
ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்"

"ஜீவப் பிரஹ்மைக்கியரூப பிரஹ்ம வித்தையினை யடையும்பொருட்டு, ஸத்சிஷ்யனாகிய முமுக்ஷுவானவன் கையில் உலர்ந்த ஸமித்துக்களை யெடுத்துக்கொண்டு, அத்யாத்ம சாஸ்திரங்களைச் சந்தேக விபரீதங்களறக் கற்றறிந்தவரும், பிரஹ்ம நிஷ்டருமாகிய சற்குருவை யடையட்டும்" என்று உபநிஷத்து கூறுகின்றது. சிஷ்யன் சற்குருவை யடைந்து விசாரித்து அறியவேண்டியவை யாவன:— (1) உலகத்தின் இயல்பு, (2) தன் நிலை (ஜீவ விசாரம்), (3) ஈஶ்வர ஸ்வரூபம் என்பனவாம். இவற்றுள் ஒவ்வொரு ஜீவனுக்கும் தன்னைப்பற்றிய அறிவு கொஞ்சம் உண்டு. முமுக்ஷு அதாவது மோக்ஷத்தில் விருப்பமுடையவனுக்கு விவேகம், வைராக்கியம், சமம், தமம், திதிட்சை, உபரதி, சிரத்தை, ஸமாதானம் என்னும் சாத

னங்கள் நிரம்பி இருக்கவேண்டு மல்லவா? ஆதலின், விவேக வைராக்கியாதிகளால், தான், ஸ்தூல சரீர மன்று என்பதும், நிஷ்காம கர்மத்தைச் செய்து சித்த சுத்தியைப் பெற்ற காரணத்தால், பரலோகத்திற்குப் புண்ணிய பல அநுபவத்தின் பொருட்டு ஜீவன் செல்லுதலும், பின்னர் புண்ணிய பலம் தேய்ந்த பின்னர் இம் மண்ணுலகத்தில் பிறத்தலும் மாத்திரமே தனது அதாவது ஜீவனது இயல்பு என்று அறிந்திருக்கின்றனன்; உலகமானது, கர்த்தா போக்தா வடிவமாயுள்ள தன்னால், கண் காது முதலிய ஐந்து ஞானேந்திரியங்களின் மூலமாய் அநுபவித்து உணரப்படும் தன்மையது என்றும் அறிந்திருக்கின்றனன்; இவற்றோடு, ஈச்வரன் ஒருவன் உண்டென்றும், அவன்தான் இவ்வுலகத்திற்குக் காரணன் என்றும், அவனே ஜீவர்களால் இயற்றப்படும் ஸகல கர்மங்களுக்கும் பலத்தைத் தருபவரென்றும் அறிந்துள்ளான். முமுக்ஷுத்துவத்தை யடைந்த பின்னர் அறிய வேண்டியதாவது:—ஜீவன் கர்த்தா போக்தா அல்ல; ஸச்சிதாநந்த வடிவ அஸங்க ஆத்ம ஸ்வரூபமே; பரமேஶ்வரனும் ஸச்சிதாநந்த வடிவன்தான்; காணப்படும் நாமரூப வடிவ உலகம் மித்தை; போக்கிய ரூப உலகம் ஸூக்ஷ்ம ஞான விசாரத்தில் மித்தை யென்று உணரப்படுங் காரணத்தால், தான் (ஜீவன்) கர்த்தாவேன்பதும் போக்தா வென்பதும் கற்பிதமாய்த் தோன்றும். தோன்றவே, போக்கிய போக்தா வடிவ ஜட சேதனப் பிரபஞ்ச காரணத்துவமும் பரமேஶ்வர ஸ்வரூபத்தினின்றும், நீங்கும். நீங்கவே ஆத்மப் பிரஹ்மைக்கிய ஞானமே மிஞ்சும். இந்த ஞானமே முமுக்ஷுவினால் அடையத்தக்கது. "தத்விஜ்ஞாநாயம்" என்று சுருதிகூறுவது இந்த ஜீவப் பிரஹ்மைக்கிய ஞானத்தைத்தான். இதுதான் மேலானதாயுள்ள பரவித்தையாகும்.

வித்தை, பரம், அபரம் என இருவகைத்து. நித்திய நைமித்திக, காம்ய, பிராயச்சித்தாதி கர்மாநுஷ்டானங்களால் இஹபர சுகங்களை யநுபவிக்கலா மென்று கூறும் கர்மகாண்ட சுருதிகளும், பேதத்தோடு கூடிய மூர்த்தி உபாஸனைகளைச் செய்து வைகுண்டம், கைலாசம் முதலிய உபாஸ்ய(ஸா)லோக்யங்களை யடைந்து ஸாமீப்ய, ஸாரூப்யாதி கிரம முக்திகளையும் பெற்றுப் பின்னரும் சாபாதிகளினடைவினல் மீண்டும் பூமியிற் பிறத்தலைப் புராணாதிகளினல் நாம் அறிவதனல் பிரதீக உபாஸனைப் பிரதிபாதக சுருதிகளும், அபரவித்தை யென்று கூறப்படும். இவ்வபரவித்தை அநித்ய பல முடைமையால் முமுக்ஷுவிற்கு ஹேயமானது. ஆதலின் பரவித்தையாகும் ஜீவப் பிரஹ்மைக்கியரூப பிரஹ்ம வித்தையே முமுக்ஷுவினல் அடையத் தக்கது. இதன் லாபத்திற்காகவே சற்குருவை அடைவது. "சமித்துக்களைக் கையில் உடையவனுய்" என்பதன் தாற்பரியமாவது, எங்ஙனம் ஸமித்தானது தன்னிடத்தில் நெருப்புப் பிடித்து எரிதற்குப் பிரதிபந்தகமாயுள்ள ஜலத்தின் சம்பந்தத்தினல் ஏற்பட்ட ஈரம் முற்றிலும் நீங்கப்பெற்றிருக்கின்றதோ அங்ஙனமே முமுக்ஷுவாகிய தன் மனமும் ஜீவப் பிரஹ்மைக்கிய தத்துவ ஞானத்திற்குப் பிரதிபந்தகமாயுள்ள உலகப் பற்றுக்கள் யாவும் வைராக்கியாதி சாதனங்களினல் முற்றும் ஒழிந்துள்ளதென்று காட்டுங் குறிப்பாகும். இது மோட்சத்தில் விருப்பமுடைய சத் சிஷ்யனுடைய சிறந்த லக்ஷணம்.

"ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்" என்னும் இரண்டு பதங்கள் சற்குருவின் தன்மையைத் தெரிவிக்கின்றன. குரு, சிஷ்யனுடைய சந்தேகங்களையும் விபரீதங்களையும் போக்கடிக்க, அத்யாத்ம ஞான சாஸ்திரங்களைத் தான்

நன்கு கற்றறிந்தவராயும், ஜீவப் ப்ரஹ்மைக்கிய சுவானுபவ முடையவ்ராயும் இருத்தல் வேண்டும். இந்த லக்ஷணங்கள் பொருந்தியவர்தான் ஆசார்யன் எனப்படுவர்.

ஆசிநோதிஹி ஶாஸ்த்ராணி ஹ்யாசாரே ஸ்தாபயத்யபி।
ஸ்வயம் ஆசரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே ॥

என்னும் பிரமாணப்படி, “ சாஸ்திரங்களை நன்கு சோதித்துணர்ந்து எங்கும் அகண்டைக ரஸமாய்க் கண்டு, அந்த பாவத்தோடு ஒழுகும் ஆசாரத்தையே மேலாகிய ஆசாரமென்று சிஷ்யர்களுக்குப் போதித்துத் தானும் அந்நிலையில் நிற்பவரே ஆசார்யனுவான்.” என்றேற்படுகின்றது. இத்தகைய சிறந்த ஆசார்யன், முமுக்ஷுவல்லாத தாழ்ந்த அதிகாரிகளைக் கண்ட காலத்தில் அவர்களின் தன்மைக்கு மாறுபாடானதும், அவர்களால் கிரகிக்கக்கூடாததுமான மேல் நிலையைப்போதித்து அவர்களது புத்தியை மயக்க மாட்டார்கள். “நபுத்திபேதம் ஜநயேத்” என்னும் பிரமாணத்தின்படி அவரவர்களது அதிகாரத்திற்கும் தன்மைக்கும் தக்கபடியே உபதேசிப்பர். இத்தகைய லக்ஷணங்களையுடைய குருவே சிஷ்யர்களால் அடையத் தக்கவர்.

குருவில்லாமல் எவனும் எந்த வித்தையையும் அப்பியஸிக்க முடியாது. எனின், அதீந்திரியமாயும், பாரலௌகிகமாயுமுள்ள ஆத்மாபின்ன பிரஹ்மத்தை யறிவதற்கு குரு அவசியம் வேண்டுமென்று சொல்லவும் வேண்டுமா ?

ஜீவப் பிரஹ்மைக்கியத்தையே பரமதாற்பரியமாயுடைய வேத, வேதாந்த, ஸ்மிருதி, புராண இதிஹாஸ, ஸூத்ராதிகள் கடலுக்குச் சமானமெனக் கூறலாம். நாம் நேரே கடலுக்குச் சென்று கடல் நீரையருந்தி தாகத்தைத் தணித்துக்கொள்ளல் முடியாது. இதை யறி

யாது ஒருவன் தாகமுடையோனுய்க் கடல் நீரைக் குடிப் பானேயாயின், குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வதுபோல், தாகத்தைத் தணித்துக்கொள்ளப் போய் தாகத்தை அதிகப்படுத்திக் கொண்டவனுவான். இங்ஙனமே அத்யாத்ம சாஸ்திரங்களை நமக்கு நாமே கற்றுணர முயல்வதாகும். இம்முயற்சியினுல் நமக்குப் பரம தாற்பரியமாயுள்ள ரஹஸ்யார்த்தம் புலப்படாத இம்மட்டேயன்றி, விபரீதமான அர்த்தங்கள் தோன்றி நமது அஞ்ஞானம் முன்னினும் அதிகப்படும்.

எங்ஙனம் மேகமானது கடல் நீரை அருந்தி, ஸர்வப் பிராணிகளும் குடித்து நீர் வேட்கையைத் தணித்துக் கொள்ளத் தக்க மதுரமான நீரைப் பொழிகின்றதோ, அங்ஙனமே, சற்குருவும் வேதவேதாந்தம் முதலிய ஸகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து சிஷ்யர்களின் அதிகாரத்திற்கேற்ப, அவரவர்களுக்குத் தகுதியானவற்றையுபதேசித்து முடிவில் மேலான நிலைமைக்குக் கொண்டு வருகின்றனர். ஆதலின் சற்குருவின் மூலமாகவேதான் ஞான சாஸ்திர விசாரம் செய்ய வேண்டியது.

சாஸ்திரங்கள் அநந்தமாயும் கடல் போல் அதிக விஸ்தாரமாயும் இருப்பதால் அவற்றை யெல்லாம் குருமுகமாய் அறிதல் கூடாததொன்றேயாகும். ஆயினும் ஒருவனுக்குச் சிறந்த குரு பக்தியிருக்குமேயாயின், அவர் மூலமாய் அவனுக்குக் கிடைத்துள்ள ஒரு வாக்கியத்தின் மூலமாய், எல்லா சாஸ்திரங்களின் ரகசியத்தையும் அறிதல் கூடும். ஸாதகனுன சிஷ்யன் காமக்குரோதாதி கல்மஷங்கள் அற்ற தன் தூய ஹிருதய பீடத்தில் சற்குருவை எழுந்தருளச் செய்து ஸதா அவரை மானஸிகமாய்ப் பூஜித்தல்வேண்டும். இத்தகைய சிஷ்யன், தூய்மையான மனத்தையுடைய தன்மையால், தன் அந்தக்கரணத்

திற்கு அதிஷ்டானமாய் விளங்கும் தனது ஆத்ம ஸ்வரூப பரதேவதையைச் சற்குருவின் அருளால், குருஸ்வரூப மாகவே அறிகின்றான். அவனுக்குத் தோன்றும் எண் ணங்கள் யாவும் குருவின உபதேசத்தினால் கிடைத்தவை களென்றே கொள்ளத் தகும்.

குரு தத்துவமானது பரமேஸ்வர தத்துவத்தைவிட மேலானதென்று ஸகல சாஸ்திரங்களும் கூறுகின்றன.

ஶிவே ருஷ்டே குருஸ்த்ராதா
குரௌ ருஷ்டே ந கஶ்சந ||

என்று ஸூதஸம்ஹிதை கூறுகின்றது. சிவன் கோபித் தால் அதை குருவால் நீக்க முடியும். குரு கோபத்தை நீக்க யாருமில்லை. இதனால் சிவதத்துவத்தைவிட குரு தத்துவம் சிறந்ததென்று ஏற்படுகின்றது.

திருவிடைமருதூரில் சில வருடங்களுக்குமுன் பிக்ஷா சாஸ்திரிகள் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் தனது குருவின் ஆணையை மீறி உலகத்திற்கு நன்மை செய்யவேண்டி ஞான சாஸ்திரமாகிய ரிபுகீதையை வட மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தார். இதனால் குருசாபம் ஏற்பட்டுத் தமது இருகண்களும் பார்வை குன்றியன. குருவும் பரிபூர்ணபாவத்தை அடைந்தனர். பிறகு அவர் இன்னது செய்வதெனத் தெரியாமல் தனது உபாஸனாமூர்த்தியாகிய ஸ்ரீ ஆநந்த தாண்டவ மூர்த்தி யாகிய ஸ்ரீ நடராஜரைத் துதிக்கச் சிதம்பரம் சென்று, சற்குரு பாவனையாய்த் துதித்துத் தான் மொழிபெயர்த்த நூலை அர்ப்பணம் செய்து ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் ஸ்ரீ நடராஜரைத் துதித்தனர். சாஸ்திரிகள் மீது கருணைகூர்ந்து நடராஜப்பெருமான் ஒருகண் பார்வையை யருளி, குருவின் கட்டளையை மீறியதால் இன்னொரு கண்

பார்வையைத் தம்மால் தருதல் முடியாதென்று கனவில் தோன்றிக் கூறினர். இச் சரித்திரத்திலிருந்து சிவதத்துவத்தை விட குருதத்துவம் சிறந்ததென்று தெளிவாகின்றதல்லவா ?

மேலும் "ஆணோரணீ யாந்மஹதோமஹீ யாந" என்றவாக்கியப்படி பரமாத்மா அணுவுக்கும் அணுவாயும், மகத்துக்கும் மகத்தாயும் விளங்குவதுபோல், குரு என்னும் பதமும் மகத்துக்கும் மகத்தானவர் என்று அறிவிக்கின்றது. ஆதலின் குருவுக்கும் பரமாத்மாவிற்கும் எள்ளளவும் பேதமில்லை என்று ஏற்படுகின்றது.

மற்றொருவகையிலும், பரமேஶ்வரனைவிட சற்குரு மேம்பட்டவரென்று ஏற்படுகின்றது. எப்படியெனில் பரமேஶ்வரன் சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்தியங்களை மாயையோடு கூடிச் செய்கின்றனர். அதனால் அவரை மாயாவிசிஷ்ட சேதனர் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. சற்குருவோவெனில் சுத்த சைதன்னிய ஸ்வரூபர். ஆதலின் மாயா காரியங்களாகும் பஞ்சகிருத்தியங்களும் அவரிடம் கிடையா. குருதத்துவம் பிரபஞ்சாதீதமானது. பிரபஞ்ச காரணராகிய பரமேஶ்வரனே ஸ்ரீ குரு ரூபமாய் வருகின்றார். இங்ஙனம் அவர் குருவடிவமாய் வருங்கால், தான் லீலையாய்க்கொண்ட மாயையை நீக்கிச் சுத்த சைதன்யமாதல் வேண்டும் என்பது சாஸ்திர சம்மதமாகும்.

ஆதலால் குருதத்துவம் எல்லாவற்றிலும் சிறந்து விளங்குவதோடு பரப்பிரஹ்மத்திற்கு அபின்னமாயும் இருக்கின்றதென ஏற்பட்டது.

குருவின் நாமதேயங்களின் தத்துவ விமர்சனம்

ஶ்ருதி, ஸ்மிருதி முதலிய அத்யாத்ம சாஸ்திரங்களில் குருவுக்குப் பல நாமாக்கள் கூறப்பட்டு அவற்றின் அர்த்த

விமர்சனமும் செய்யப்பட்டிருக்கின்றது. அவற்றிற் சில வற்றை இங்கு விசாரிப்போம்.

“𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌦𑍇𑌵𑍋 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 𑌗𑍁𑌰𑍁𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑍍𑌰𑍀 𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃” என்னும் பிரமாணப்படி எல்லா தேவதைகளும் குருரூபமே என்றேற்படுகின்றது. இது பொதுவகை. சிறப்புவகையாய்க் கூறுமிடத்து, ஸ்ரீ குருவிற்கு, ஆசார்யன், ஆராத்யன், தேசிகன், ஸ்வாமி, மஹேஸ்வரன், ஸ்ரீநாதன், தேவன், பட்டாரகன், பிரபு, யோகி, ஸம்யமீ, அவதூதன் முதலிய நாமதேயங்கள் உண்டு. இப்பெயர்களின் அர்த்தத்தை விசாரிப்போம்.

குரு

𑌗𑍁𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 – 𑌰𑍁𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌰𑍋𑌧𑌕𑌃 ।
𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌰 𑌨𑌿𑌰𑍋𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌗𑍁𑌰𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

கு-என்பது அஞ்ஞானம். ரு-என்பது அதனை யொழிப்பது. ஆதலின் அஞ்ஞானத்தை யொழித்துத் தத்துவ ஞானத்தை அருள்பவருக்குக் குரு என்று பெயர்.

𑌗𑌕𑌾𑌰𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 𑌰𑍇𑌫𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌃 ।
𑌉𑌕𑌾𑌰𑌾𑌚𑍍𑌛𑌿𑌵 𑌤𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌗𑍁𑌰𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

குரு என்னும் நாமத்திற்கு மற்றொரு வகையாய்ப் பொருள் கூறப்படுகிறது.

கு-என்பது தத்துவ ஞானத்தை யருளல். ர-என்பது அத்தத்வக்ஞானம் அநுபவத்திற்கு வரும்படி செய்தல். உகர மென்பது ஆத்மஞான அநுபவத்தினால் ஆத்மப் பிரஹ்மைக்கியத்தை யுணர்தல். ஆகிய இவற்றை யருளுவதால் குருவெனும் பெயர் சித்தித்தது.

ஆசார்யன்

ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி ।
ஸ்வயம் ஆசரதே யஸ்மாத் தஸ்மாத் ஆசார்ய உச்யதே ॥

எல்லா ஞான சாஸ்திரங்களையும் நன்கு சோதித்துணர்ந்து, ஆத்மப் பிரஹ்மைக்கிய மென்னும் மிகச் சிறந்த ஆசாரத்தைச் சிஷ்யர்களுக்குப் போதித்துத் தானும் அந்நிலையில் நிற்பதனால் ஆசார்யன் எனப்படுகின்றான்.

ஆராத்தியன்

ஆத்மஜ்ஞாந ப்ரதாநாச்ச ராகத்வேஷாதி வர்ஜநாத் ।
ஸதைக்யநிஷ்டிதத்வாச்ச ஆராத்ய இதி கத்யதே ॥

ஆத்ம ஞானத்தை யருளுவதாலும், ராகத்துவேஷாதிகளற்று விளங்குவதாலும். ஸதா ஜீவப் பிரஹ்மைக்கிய சமாதியில் இருப்பதனாலும், ஆராத்தியன் என்னும் பெயர் ஏற்பட்டது.

தேசிகன்

தேஜோரூபமயத்வாச்ச ஶிஷ்யாநுக்ரஹ காரணாத் ।
காருண்யைகமூர்த்தித்வாச்ச தேஶிக: கதித: ப்ரியே ॥

பிரகாசமே வடிவமாயுடையதாலும், சிஷ்யர்களின் அனுக்கிரஹத்திற்குக் காரணராயிருப்பதாலும், கருணையே தேகமாயுடையதாலும் தேசிகன் என்று அழைக்கப்படுகின்றனர்.

ஸ்வாமி

ஸ்வாத்ம ஶாந்திஸம்பந்நத்வாத் பரதத்வாய லம்பநாத் ।
ஶிஷ்யாஜ்ஞாநவிநாஶநத்வாத் ஸ்வாமீதி கதித: ப்ரியே ॥

வாஸனக்ஷய மனோ நாசங்களால் பரதத்துவ சிந்தனை யுடைமையினாலும், கற்பிதமாகிய உலகப்பிரவிர்த்தி யில்லாமையினாலும் ஸ்வாமி எனப்படுகின்றனர்.

மஹேஶ்வரன்

மநோதோஷாதி நிர்முக்த: ஹேத்வாதாதி வர்ஜித: |
ஶ்வாதி ப்ராணிஷு ஸாத்ருஶ்யாத் ரமணாச்ச மஹேஶ்வர: ||

மனத்தின் அசுத்தங்கள் நசித்ததனாலும், வாதங்களில் தலையிட்டுக் கொள்ளாது யாவருடனும் நட்பு கொள்வதனாலும், நாய் முதலிய தாழ்ந்த பிராணிகளிடத்திலும் ஆத்ம ஸ்வரூபத்தை யுணர்ந்து ஆத்மாநந்தத்தில் திளைக்குங் காரணத்தால் குருவிற்கு மஹேஶ்வரன் என்னும் பெயருண்டாயிற்று.

ஸ்ரீநாதர்

ஶ்ரீமோக்ஷ ஜ்ஞாந தாத்ருத்வாத் நாத ப்ரஹ்மாத்ம போதநாத் |
ஹதாஜ்ஞாந லிங்கத்வாத் ஶ்ரீநாத: கதித: ப்ரியே ||

மோக்ஷ ஞானத்தையளிப்பதனாலும், நாதப் பிரஹ்மத்தின் ஞானத்தை ஆத்மாவிற்கு அபேதமாய்ப் போதிப்பதாலும், அஞ்ஞானம் ஒழிந்து விளங்கும் லிங்கத்தினாலும் ஸ்ரீநாதர் என்னும் பெயருண்டாயிற்று.

தேவன்

தேஶ காலாவிரோதேந வத்ஸாநாம் தீ குலாகமை: |
வஶீக்ருத ஜகஜ்ஜீவ: தேவ இத்யபிதீயதே ||

கால தேசங்களுக்கு விரோதமில்லாமல் சிஷ்யர்களுக்குக் குலாகமங்களாகிய ஞான சாஸ்திரங்களைப் போதிப்ப

தாலும் உலகப்பற்றுக்களினின்றும் நீங்கினவராயும், எல்லா ஜீவர்களையும் தனது ஞானப்பார்வையில் தன் வயப் படுத்துபவராயும் இருப்பதால் தேவன் எனப்படுவான்.

பட்டாரகன்

ஸம்ஸார ப்ரஶமநாத் டங்காரோத்பூத ஸேவநாத் |
ரக்ஷணாச் சரணீயத்வாத் பட்டாரக உதீரித: ||

ஜனன மரணமென்னும் ஸம்ஸாரத்தை யொழிப்பதனாலும், ஆநந்த ஸ்வரூப மோக்ஷத்தை யளிக்கும் (டகார) பீஜரூப சிற்சந்திர கலையைச் சிரசில் அணிந்திருப்பதாலும், தன்னைச் சரணமடைந்தவரை பிறப்பிறப்பென்னும் பெரு நோயினின்றும் ரக்ஷிப்பதனாலும், மனோஹரமாய் இருப்பதனாலும் அவர் பட்டாரகர் என்னும் பெயரைப் பெற்றார்.

பிரபு

ப்ராகமாணாம் வேதாந்த ரஹஸ்யார்த்த விபோதநாத் |
புக்தி முக்தி ப்ரதாநாச்ச ப்ரபுரித்யபிதீயதே ||

மறை பொருளாயுள்ள ஆகமங்கள், வேதாந்தங்கள் முதலியவற்றின் இரகஸ்யங்களை நன்கு விளக்குவதனாலும், போக மோக்ஷங்களை யருள்வதனாலும் பிரபு என்றழைக்கப்படுவர்.

யோகி

யோநி முத்ராரஹஸ்யாநாம் ப்ரகாஶாந் மந்த்ர ஸேவநாத் |
தேவகண ஸம்பூஜ்யத்வாத் யோகீதி கத்யதே ப்ரியே ||

மந்த்ரங்களின் வீர்யரூபமான தத்துவத்தை விளக்கி, யோனி முத்திரையின் ரஹஸ்யத்தைப் போதிப்பதாலும், தேவகணங்களால் பூஜிக்கப்படுவதாலும் யோகி என்பர்.

ஸம்யமீ

𑌸𑌂𑌗𑌦𑍋𑌷𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑌤𑍍𑌤𑍃𑌷𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌤𑍍।
𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨 𑌨𑌿𑌬𑌂𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌂𑌯𑌮𑍀𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

உலகப்பற்றினலுண்டாகும் துக்கங்களை யெல்லாம் ஒழித்ததனலும், பிரஹ்மசரியம் முதல் அதிவர்ணாஶ்ரமம் வரையிலுள்ள எந்த ஆஶ்ரமத்திலும் வசிப்பதாலும், கட்டுப்படுத்தும் தர்ம சாஸ்திரங்களுக்கு அதீதமாய் விளங்குவதாலும் ஸம்யமீ என்னும் பெயர் ஏற்பட்டது.

அவதூதர்

𑌅𑌕𑍍𑌷𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌧𑍂𑌤𑌸𑌂𑌸𑌾𑌰𑌬𑌂𑌧𑌨𑌾𑌤𑍍।
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑌰𑍍𑌥𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌵𑌧𑍂𑌤𑍋𑌽𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

நாச ரகிதமாய் இருப்பதனலும் யாவராலும் பூஜிக்கப்படத்தக்கவரா யிருப்பதாலும் "தத்துவமஸி" முதலிய மஹா வாக்கியங்களினல் சித்திக்கும் ஸ்வரூபமுடையவரா யிருத்தலினலும் அவதூதர் என்னும் காரணப்பெயர் ஏற்பட்டது.

இதுகாறும் நாம் விசாரித்த நாமங்களினல் ஸ்ரீ குருநாதரின் இயல்பும் மகிமையும் நன்கு விளங்குகின்றன. மேலும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாளின் பரம குருவாகிய ஸ்ரீ கௌட பாதாசார்யாளால் இயற்றப்பட்ட **ஸ்ரீ வித்தியா மந்த்ர ரத்ன ஸூத்ர வியாக்கியானத்தில்,**

"𑌯𑌥𑌾 𑌘𑌟𑌶𑍍𑌚 𑌕𑌲𑌶𑌃 𑌕𑍁𑌂𑌭𑌶𑍍𑌚𑍈𑌕𑌾𑌰𑍍𑌥𑌵𑌾𑌚𑌕𑌾𑌃 ।
𑌤𑌥𑌾 𑌦𑍇𑌵𑌶𑍍𑌚 𑌮𑌂𑌤𑍍𑌰𑌶𑍍𑌚 𑌗𑍁𑌰𑍁𑌶𑍍𑌚𑍈𑌕𑌾𑌰𑍍𑌥 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌮𑌂𑌤𑍍𑌰𑌃। 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌸𑌕𑌲𑌮𑌂𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨 𑌦𑍇𑌵𑌤𑌾 ॥ 𑌹𑍇𑌤𑍋𑌹𑌾𑌵𑌾𑌤𑍍 ।
𑌈𑌶𑍍𑌵𑌰𑍋 𑌗𑍁𑌰𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌤𑍍,

எங்ஙனம் கடம், கலசம், கும்பம் முதலிய பதங்கள் குடத்தின் பர்யாய நாமங்களோ, அங்ஙனமே தேவ, மந்த்ர, குரு முதலிய பெயர்கள் ஒரு பொருளையே குறிக்கும் பரியாய நாமங்களாகும். ஆதலின் குருவே மந்திர ஸ்வரூபம், மந்த்ரத்தின் அதிதேவதையும் அவரே. உண்மை நோக்கில் ஈஸ்வரன், குரு, ஸாதகன், இவர்களுக்குப் பேதமே இல்லை என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஆனல் சிஷ்யனுகிய ஸாதகன், தனக்கும் தன் குருவுக்குமுள்ள அபேதத்தைப் பரிபூர்ண அகண்டாகார விருத்தியில் பாவிக்கலாமே யன்றி குரு சுச்ரூஷையிலும், பக்தியிலும், ஒழுக்கத்திலும் எள்ளளவுங் காட்டக்கூடாது. "𑌭𑌾𑌵𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌸𑌦𑌾 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌨 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍 |" என்பது இதற்குப் பிரமாணமாம்.

குருதத்துவம்

தத்துவம் என்ருல் உண்மைப் பொருள் என்று அர்த்தமாகும். அழிவில்லாமல் நித்தியமாயுள்ள தத்துவம் ஒன்றே. எங்ஙனம் நெய்யானது ஆயுளை விருத்திசெய்யுங் காரணத்தால் அதற்கு "ஆயுஸ்" என்று கூறப்படுகின்றதோ அங்ஙனமே பாரமார்த்திக தத்துவமான பரப்பிரஹ்மத்தை யறிதற்குச் சாதனங்களாயுள்ள சிலவற்றைச் சாஸ்திரங்களில் தத்துவங்கள் என்று கூறப்பட்டிருக்கின்றன. இத்தத்துவங்கள் 25 என்றும், 36 என்றும், 51 என்றும், 96 என்றும், பலவகையாயுள்ளன. சைவம், சாக்தம் முதலிய ஆகமங்களில் முப்பத்தாறு தத்துவங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவ்வாகமங்களை யொட்டி, அம்முப்பத்தாறு தத்துவங்களும் மூன்று வகைப்படும். அவை

முறையே அசுத்த தத்துவங்கள் 24 ; சுத்தாசுத்த தத்துவங்கள் 7 ; சுத்த தத்துவங்கள் 5 ; ஆக முப்பத்தாறு.

சுத்த தத்துவங்கள் 5. :—சுத்தவித்தை, ஈஶ்வர, ஸதாசிவ, சக்தி, சிவம் என்னும் ஐந்து தத்துவங்களும் சுத்த தத்துவங்களாகும்.

சுத்தாசுத்த தத்துவங்கள் 7. :—மாயை, கலை, அவித்தை, அராக, கால, நியதி, புருஷன் என்னும் ஏழும் சுத்தாசுத்த மிஶ்ர தத்துவங்களாகும்.

அசுத்த தத்துவங்கள். 24. :—பூதங்கள் 5., தன்மாத்திரை 5., கர்மேந்திரியங்கள் 5., ஞானேந்திரியங்கள் 5., மனம், புத்தி, அகங்காரம், பிரகிருதி ஆக இருபத்தினன்காகும். சுத்த தத்துவங்கள் ஐந்தும் ஞானபூமிகைகளாகும். சுத்த வித்தையினுல், சுத்தாசுத்த தத்துவத்திலுள்ள புருஷன், தனக்கு மாயையினுல் தோன்றியதான, கலை, அவித்தை, ராகம், காலம், நியதி என்னும் ஐந்து மறைப்புக்களால் ஏற்பட்ட பேதத்தையொழித்துத் தான் பரமேஶ்வர வடிவினனே என்று அறிகின்ருன். பின்னர் ஈஶ்வர தத்துவத்தினுல், பிரபஞ்சத்திற்கும் பரமேஶ்வரனுக்கும் உள்ள அபேதத்தையும் அறிகின்ருன். ஜகத்து, ஜீவன் பரம் என்னும் மூன்றன் அபேத வுணர்ச்சி இத்தத்துவங்களால் உண்டாகின்றது. இதுவே அகண்டாகார விருத்தி வடிவ சிற்சக்தியென்னும்சக்தி தத்துவம். இந்த அகண்டாகார சிற்சக்தி வடிவ விமர்சமானது, ஸ்வயம் பிரகாச நித்திய ஆனந்தகன சிவமாய் நிற்கும் நிலையே சிவ தத்துவம் எனப்படும். இங்கே கூறப்பட்ட சிவம், சக்தி என்னும் இரண்டு தத்துவங்களும் தத்துவ ரூபமாயும் அத்தத்துவங்களுக்கு அதீத ரூபமாயும் விளங்கும் என்பது சாஸ்திர சித்தாந்தமாகும்.

குரு என்னும் பதமானது "அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தையளிப்பவர்" என்னும் அர்த்த முடைய காரணத்தால், மேற்கூறிய மூவகைத் தத்துவங் களிலும், குரு தத்துவமானது அதிஷ்டித்துக் கொண்டு அந்த அந்த தத்துவங்களின் ஞானங்களை அசுத்த மாகவோ, மிஶ்ரமாகவோ, சுத்தமாகவோ கொடுத்துக் கொண்டிருக்கும்.

சுத்த தத்துவங்களாகும் சுத்த வித்தை முதலியவற் றில் விளங்கும் ஞானம் அல்லது குருதத்துவம் பிர தானமும் பாரமார்த்திகமுமாய் இருக்கும்.

சுத்தாசுத்த தத்துவங்களாகும் மாயை முதலிய ஏழு தத்துவங்களின் விமர்சமாவது:—சுத்த சிவ தத்துவமா னது மாயா தத்துவத்தினுல் வியாபிக்கப்பட்டபோது எங் கும் வியாபகமாய் உள்ள உணர்ச்சி நீங்கி "பரிச்சின் னன்" என்கிற வுணர்ச்சியுண்டாகின்றது. இது தான் கலா தத்துவம். பரிச்சின்ன பாவம் ஏற்பட்டவுடன் "ஸர் வக்ஞன்" என்ற வுணர்ச்சி நீங்கி "கிஞ்சிக்ஞன்" என் னும் மயக்கம் உண்டாகின்றது. அது அவித்யா தத்துவம். பின்னர் "அவாப்தகாமன், நித்ய திருப்தன்" என்னும் உண்மையானது அராக தத்துவத்தினுல் மறைந்து இது வேண்டும்; அது வேண்டும் என்னும் அவா வுண்டா கின்றது. அவாவோடு கூடிய பின்னர் காலதத்துவத்தினுல் "நித்தியன்" என்னும் உணர்வுநீங்கி "அநித்தியன்; காலத்தினுல் கட்டுப்பட்டவன்; என்றைக்காயினும் எனக்கு மரணம் உண்டு." என்னும் எண்ணம் உண்டாகின்றது.

இங்ஙனம் காலதத்துவம் ஏற்பட்டவுடனே இன்ன இன்ன காலத்தில் இவை இவை செய்யப்படவேண்டும் என்னும் நியதியானது, கர்த்தவ்வியம் அற்ற அகர்த்தா வுக்கு நியதி தத்துவத்தால் ஏற்பட்டது. மாயையினுல்

ஏற்பட்ட அவித்தை முதல் நியதியீருகவுள்ள விக்ஷேப தத்துவங்களினால், வாஸ்தவத்தில் தான் சிவமாய் இருந்தும், பரிச்சின்ன, கிஞ்சிக்ஞ, ஸகாம, அநித்திய, நியாமக அத்தியாஸங்களை யடைந்து, புருஷன் அல்லது ஜீவன் என்னும் பெயரைப் பெறுகின்றான். இதில் அசுத்தமாயுள்ள மாயையும் அதன் காரியங்களாயுள்ள கலாதிகளும் நீங்க, புருஷன் உண்மைச் சிவமாகின்றான். புருஷன் சிவமாதற்குச் சுத்தவித்தை முதலியன அத்தியாவசியமாம்.

இனி அசுத்த தத்துவ விமர்சம் செய்வோம். பிரகிருதி முதல் பிரிதிவி ஈருகவுள்ள இருபத்திநான்கு தத்துவங்களும் ஜட சொரூபமானவை. இவை ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண தேக வடிவமானவை. இவைதான் போக்கிய வடிவ பிரபஞ்சமாயும், போகாயதனமான சரீரமாயும் விளங்குவன. யான், எனது, என்னும் அஹங்கார, மமகாரங்கள் இவற்றினுள்ளனவாகும். இவற்றோடு சேர்ந்துதான் புருஷன் பல துன்பங்களுக்கு உட்பட்டு வருந்துகின்றான். புருஷனிடத்துள்ள அத்தியாஸம் நீங்கிவிடின் அவன் ஞானியாகின்றான். ஞானிக்கு அசுத்த தத்துவங்கள் துக்கரூபமன்று. ஏனெனில் அவனுக்குத் தானல்லாதவற்றில் தானென்னும் மயக்கமும், தனதல்லாதனவற்றில் தனதென்னும் பிராந்தியும் அற்றிருக்கின்றன.

பிரகிருதி முதல் பிரிதிவியீருகவுள்ள அசுத்த தத்துவங்கள் ஆத்மாவல்லவென்று ஆத்ம விவேகத்தினால் நேதி செய்து (இதுவல்லவென்று உணர்ந்து) தள்ளுதற்குரிய ஞானத்தை யளிப்பவர் அசுத்ததத்துவ உபாதியையுடைய குருவாவர். இங்ஙனமே சுத்தாசுத்த தத்துவ உபாதியை யுடைய குருவையும், சுத்த தத்வோபகித குருவையும் அறிக.

ஸ்ரீகௌட பாதாசார்யாள் இயற்றிய ஸ்ரீவித்யா மந்த்ர ரத்ந ஸூத்திரங்களில், இந்த முப்பத்தாறு தத்துவங்களையுடைய அசுத்த, சுத்தாசுத்த, சுத்த தத்துவங்களுக்கு முறையே ஆத்ம, வித்யா, சிவதத்துவங்களெனும் பெயரளிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாத்ம, வித்யா, சிவ தத்துவங்கள்தான் மானவ, ஸித்த, திவ்விய மென்னும் மூவகையான குருமண்டல ஒக (கூட்ட)ங்களாகும். இம் மூன்று வகையான குரு மண்டலங்களும் உபாதிகளோடு கூடியனவே. நிருபாதிக ஸ்வரூப குருதத்துவமோ வெனின், இவ்வுபாதிகளுக்கு அதிஷ்டானமாய் விளங்குவதாகும். இது மனோவாக்குகளுக்கு எட்டாததாக விருக்கின்றது. ஆதலின் பரஸ்வரூபமாம். இதுவே துரீய ஸ்வரூபமுமாகும். இதுதான் தத்துவாதீத வடிவம். "ஷட்த்ரிம்ஶத்தத்த்வத்ரயம் தத்த்வாதீதம் ஹி ஸத்குரோர்வபுஷகம்" என்று விரூபாக்ஷ பஞ்சாசிகை கூறுகின்றதை இங்கே அறிதல் அவசியம்.

இத்தகைய சாந்த, சிவ, அத்வைத துரீய ஸ்வரூப குரு தத்துவமே தான் விமர்சாத்மகமாயுள்ள ஆத்ய சக்தியாய் விளங்குகின்றது. "ஶாந்தாத்யா ஹ்ருதயே ஶக்தி: ஸா விமர்ஶமயீ மதா | நவத்வம் தஸ்ய தேஹஸ்ய ரந்த்ரேஷ்வேவ நாடீவ ஹாஸதே ||" என்னும் தந்த்ர ராஜப் பிரமாணத்தின்படி குருஸ்வரூபமானது விமர்ச ஸ்வரூபமான சித்சக்தியென்னும் ஆத்யசக்தியாகும். குருஸ்வரூபத்தின் ஒன்பது வகையாகும் தன்மையானது தேகத்திலுள்ள இரண்டு கண், இரண்டு காது, இரண்டு மூக்கு (நாசித்வாரங்கள்), வாய், பாயு, உபஸ்தம் என்னும் ஒன்பது ஓட்டைகளால் விளங்குகின்றது. மேற்கூறிய நவத் துவாரங்களாலும் ஞானம் ஏற்படுவதால் அவைகள் குரு ஸ்தானங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன.

சக்தி இரண்டு வகைப்படும். ஒன்று சிற்சக்தி. இது தான் சிவத்தின் ஸ்வாபாவிகமான ஆத்ய சக்தியென்று கூறப்படும். மற்றொன்று அபரா சக்தி அல்லது ஜடசக்தி யாகும். "விஜ்ஞாந தைநாம்ஸ்வா ஜகஸ்ஸ்ருஷ்டி ஜகாசிகா" என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தில் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. இந்த சித்சக்திரூப ஆத்ய சக்தியானது சுத்தப் பிரகாச வடிவ சிவத்திற்குப் "பரிபூர்ணோஹம்' என்னும் பராஹந்தையை விமர்சம் செய்வதனால் குருஸ்வரூபமாகக் கூறப்பட்டது இந்த பராஹந்தையானது காமகலா ஸ்வரூபம்; இது பிரகாசவடிவ சிவமும், விமர்சரூப சக்தியும் ஐக்கியமான ஸ்வரூபம். இதன் பின்னரே "ஸோऽகாமயத; பஹுஸ்யாம் ப்ரஜாயேய" என்னும் சிருஷ்டியின் இச்சையுண்டாயிற்று. இச்சை, ஞானம், கிரியை யென்னும் மூன்றும் மாயாரூப அவித்யா சக்திகளாகும். ஜடப்பிரபஞ்ச சிருஷ்டியின் பொருட்டு ஏற்பட்டன வாதலின் இவைகள் ஜடசக்திகளே. இச்ஜடசக்திகள் குருவினிடத்தில் கிடையாது. ஏனெனில் அவருக்குக் கர்த்தவ்வியம் இல்லை. கர்த்தவ்வியம் பரமேஶ்வரனிடத்தில் ஜீவர்களின் கர்மாநுபவங் காரணமாகக் கற்பிக்கப் படுகின்றது.

விமர்சரூப குருவை ஒன்பது வகையாய்ச் சாஸ்திரங்கள் கூறுவதன் அபிப்பிராயம் யாதெனில், பாஹ்ய விஷயங்களின் ஞானம், கண், காது முதலிய இந்திரியங்களால், மனத்திற்கு ஏற்பட்டு, பிரமாதாவாகிய ஜீவனால் அறியப் படுகின்றது.

பாஹ்ய ஞானம் பேதத்தோடு கூடியதேயாகும். ஆயினும் அந்தஞானத்திற்கு உபாதியாயிருக்கும் (பேத) விஷயத்தை நீக்கிவிடின், பேத ரஹித அகண்ட ஞானம் சேஷிக்கும். எங்ஙனமெனின், குடஞானம், மண்ஞானம்,

குயவன் ஞானம், சக்கிர ஞானம், தண்ட ஞானம் முதலிய வற்றில் குடம், மண், குயவன், சக்கரம், தண்டம் முதலிய விஷயோபாதிகளை நீக்கிப்பார்க்கின், குடம், மண் முதலிய எல்லாவற்றோடும் அநுஸ்யூதமாய் விளங்கிய ஞானம் ஏகரஸமாய் மிஞ்சும். இந்த அகண்ட ஞானமே விமர்சரூப குரு ஸ்வரூபமாம்.

நமது சரீரத்திலுள்ள ஒன்பது துவாரங்களும் ஆத்மா, வித்யா, சிவ தத்துவங்களுள் அடங்கி; மானவ, ஸித்த, திவ்ய மென்னும் மூவகைக் குரு மண்டலக் கூட்டங்களாகவும் பாவிக்கப்படுகின்றன. இங்ஙனமன்றி வேறு வகையாகவும், சில தந்த்ர சாஸ்திரங்களில் குரு ஸ்தானங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவை எவை யெனின்; கண், காது, மூக்கு, நாக்கு, மெய் என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்து: வாக்கு, பாயு, உபஸ்தம் என்னும் கர்மேந்திரியங்கள் மூன்று; மனம் ஒன்று, ஆக ஒன்பதும் ஆகும்.

குருஸ்தானங்கள், இங்ஙனம், சரீரத்தில் ஒன்பது வகையாகக் கூறப்படினும் இந்த குருஸ்வரூபம் ஆத்ம, வித்யா, சிவ தத்துவ மயமேயாகும்; ஆதலின் உபாதிகளோடு கூடியதே. தத்துவதீத நிருபாதிக குருஸ்தானம் எதுவெனின் கூறப்படுகின்றது.

[illegible] |

[illegible] ||

நமது சிரஸிலுள்ள பிரஹ்மரந்திரத்தில் ஆயிரம் இதழ்களோடு கூடிய கமலம் ஒன்றுள்ளது. இது கீழ் நோக்கியிருக்கும். இங்ஙனமே மூலாதாரத்திற்குக் கீழ் ஒரு ஸஹஸ்ராரம் இருக்கிறது. இது மேல் நோக்கியுள்ளது. கீழுள்ள இந்த ஸஹஸ்ராரம் சிவப்பு நிறமாயிருக்கும்.

இது குள ஸஹஸ்ராரமென்று பெயர். பிரஹ்மரந்த்ரத்தி லுள்ளது அகுள பத்மமாகும். இது வெண்மை நிற மானது. இதன் கர்ணிகையில் ஒரு முக்கோணம் உண்டு. இந்த முக்கோணத்தின் மூன்று ரேகைகளிலும் ஒவ்வொரு ரேகைக்குப் பதினாறு அக்ஷரங்கள் வீதம் 48 எழுத்துக் களும், மூலைகளில் ஹ-ள-க்ஷ என்னும் மூன்று அக்ஷ ரங்களுமாக ஐம்பத்தோரெழுத்துக்களும் விளங்கும். ஆதி லின் இம்முக்கோணம் மாத்ருகாபீடமாகும். இந்த மணி பீடத்திற்குள் பன்னிரண்டுதளங்களுள்ள ஒரு சிறு கமல முண்டு. இந்த ஸூக்ஷ்மமான கமலத்தின் மத்தியில் (கர்ணிகையில்) ஸத்குரு நாதரது சரணங்கள் விளங்கும். இது தான் பாரமார்த்திகமான குரு ஸ்வரூபம் விளங்கும் ஸ்தானமாகும்.

இத்தகைய பாரமார்த்திக சிவாபின்ன குரு ஸ்வரூப மானது, அகண்டாகார விருத்தியினால் ஸ்வயமாய்ப் பிர காசிக்கின்றது.

முற்கூறிய பிரகிருதி முதல் பிரிதிவி யீறாகவுள்ள இரு பத்து நான்கு அசுத்த தத்துவங்களும், ஆத்ம தத்துவத்தி லடங்கி மானவ ஒக குரு மண்டலமென்னும் பெயரைப் பெற்று துவைத விருத்தியால் விளங்கும்.

மாயை, கலை, அவித்தை முதலிய ஏழு சுத்தாசுத்த தத்துவங்களும் வித்தியா தத்துவத்திலடங்கி ஸித்த ஒக குரு மண்டலமென்னும் பெயரைப்பெற்று ஸாக்ஷி விருத்தி யால் பாவிக்கப்படுகின்றன.

எஞ்சிய சுத்த வித்யாதி சிவாந்தமாயுள்ள ஐந்து சுத்த தத்துவங்களும் சிவ தத்துவத்தில் அடங்கி திவ்விய ஒக குருமண்டலமென்னும் பெயரைப்பெற்று அகண்டாகார விருத்தியினால் பிரகாசிக்கின்றன. தத்துவாதீத சிவாபின்ன பர ஒக குரு ஸ்வரூபமானது ஸஹஜ ஸ்திதியாகவே உள்ள

நிலையாகும். துவைத விருத்தி ஜாக்கிரத்திலும்; ஸாக்ஷி விருத்தி ஸ்வப்னம், ஸுஷுப்தி, ஸுக துக்கானுபவம், அத்தியாஸம், மனேகல்பித தியேய ஸாக்ஷாத்காரம் முதலியவைகளிலும்; அகண்டாகார விருத்தி சுத்த த்ரிபுடி ரூப ஸவிகல்பஸமாதியிலும் விளங்குவனவாயிருக்கின்றன.

இங்ஙனம் குருஸ்வரூபமானது பிரிதிவிமுதல் சிவாந்தமாயுள்ள முப்பத்தாறு தத்துவரூபமாயும், அத்தத்துவாதீதமாயும்; ஆத்ம, வித்யா, சிவதத்துவரூபமாயும், அவற்றிற்கு அதீதமாயும்; ஞானேந்திரிய, கர்மேந்திரிய அந்தக்கரணவடிவமாயும், அவற்றிற்கு விலக்ஷணமாயும்; துவைத, ஸாக்ஷி, அகண்டாகார வடிவ விருத்தித்திரய ஸ்வரூபமாயும், அவற்றிற்கு அதிஷ்டானமாயும்; ஜாக்கிரம், சொப்னம், சுஷுப்தி, பிரமை (அத்யாஸம்), தியானம், ஸவிகல்ப ஸமாதிமுதலிய அவஸ்தைகளாகவும், அவற்றில் விளங்கும் அகண்ட ஞானமாகவும் பிரகாசிப்பது ஒருவாறு சுருக்கமாய் விமர்சிக்கப்பட்டது.

இனி, குரு பாரம்பர்ய ஞானத்தையும் அதன் இன்றியாமையை (அத்தியாவசியத்தை)யும் விசாரிப்போம்.

குருபாரம்பரை

பிரஹ்மவித்தையானது குருசிஷ்யக்கிரமத்தில்தான் நிலைத்து இருக்கிறது. [illegible] ॥ பிரஹ்மவித்தையானது, பிரஹ்ம ஸ்வரூப குரு அவதாரங்களில் முதலாவதான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியினின்றும் சிஷ்யப் பிரசிஷ்யக் கிரமமாய் இப்பூமியின்கண் பரவி நிலைபெற்றுச்செழித்து வளர்ந்துகொண்டிருக்கின்றது என்பது இதற்குப் பிரமாணமாம்.

முமுக்ஷு அல்லது ஸாதகனானவன், பாரம்பர்யக் கிரமத்தில் வந்து, பரம்பரையின் ஞானத்தோடுள்ள ஒரு

குருவை யடைந்தாலன்றி, அவன் கருதிய பலனை யடைய முடியாது. பாரம்பர்யேண விஜ்ஞாதா ப⁴வப³ந்த⁴விமோசநீ || என்று வாமகேச்வரதந்திரம் கூறுவது இங்கு அறிதற்பாலது. அன்றியும் ஸ்ரீஸூத ஸம்ஹிதையிலும்—

யோ வித்³யா ஸந்ததி ஜ்ஞாந விஹீநோ தே³ஶிகோ ப⁴வேத் |
ஸ நரோ ப⁴க்ஷணே நைவ க்ஷுத்பீடா³யாம் விநிவர்த்தயேத் ||

யோ வித்³யா ஸந்ததி ஜ்ஞாந விஶிஷ்டோ தே³ஶிகோ ப⁴வேத் !
ஸோऽநாயாஸேந ஸம்ஸாரார்ணவோத்தாரகோ ப⁴வேத் ||

ஸம்ப்ரதா³ய விஹீநாய வித்³யா வேதா³ந்த பாரகா³: |
ஸா வித்³யா நைவ வித்³யா ஸ்யாத் இதி தத்த்வ விதா³ம் ஸ்தி²தி: ||

பாரம்பர்ய விஜ்ஞாநம் பரவித்³யா ப்ரவர்த்தகம் |
பாரம்பர்யாபவர்ஜேந வித்³யா ஸாவீர்ய வர்த்தநா ||

யதா²யோக்³யம் ஜ்ஞாநம் விபாகஹேத்வ காரகம் |
பாரம்பர்ய விஜ்ஞாநம் ததா² ஜ்ஞாநேந காரகம் ||

ஶக்தி ரக்த ப்ரஹதீ விஜ்ரும்ப⁴தே யஸ்ய தே³ஶிக பரம்பரா யுதா |
ப்ரக்தி விஸ்ரவி சாஸ்தி ஸத்³க்³ரோ: ஶாஸ்த்ரவம்ஶ பர வேதே³நத: ||

எவனொருவன், குரு ஸம்பிரதாய பரம்பரையில் வராமலும் தன் குரு பரம்பரா ஞான மில்லாமலும் உள்ள குருவை யடைவானேயாயின், அவன் ஆகாசபக்ஷணத்தால் தனது

பசியைத் தீர்த்துக்கொள்ள முயல்பவனுவன். ஆனால் ஸம்பிரதாய பரம்பரையில் வந்த வொருவன், குருவாகப் பவிப்பானேயாகில், அவன் தனது சிஷ்யர்களின் பவ பந்தங்களை வெகு சுலபமாய் ஒழித்து அவர்களைக் கரை யேற்றுகின்றான். "ஓ வேதாந்த வித்யா பாரங்கதர்களே ! "குரு பரம்பரையின் ஞானமின்றியவன், தான் அடைந்த வித்தையினால் ஞானத்தைப் பெறுவதில்லை" என்று வித்வான்கள் கூறுகின்றனர்; ஆதலின் குரு பாரம்பர்ய ஞானமே பிரஹ்மஞானத்தைப் பூர்ணமாய் அளிக்கின்றது. விவாஹத்தில் கோத்ர ஞானமானது எவ்வளவு அவசியமோ, குருபரம்பரா ஞானமும் பிரஹ்மவித்யாஸித்தி யில் அவ்வளவு அவசியமாக விருக்கின்றது.

எவனுக்குத் தேசிகனுடைய பரம்பரையின் ஞானம் நன்றாக விருக்கின்றதோ அவனுடைய ஆத்மசக்தி நன்கு விகஸிக்கின்றது; குருபரம்பரையின் ஞானத்தினால் அவ னுக்கு மோக்ஷம் வெகுசுலபமாய்ச் சித்திக்கின்றது.

இந்த குரு பரம்பரையானது ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியி னின்றும் ஆரம்பித்திருப்பதாய் முன்னர் கூறப்பட்டது.

𑌸𑌦𑌾 𑌶𑌿𑌵 𑌸𑌮𑌾𑌰𑌂𑌭𑌾𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌂 ॥
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁 𑌪𑌰𑌂𑌪𑌰𑌾𑌂 ॥

என்னும் சுலோகமானது குருபரம்பரையின் முதல், இடை, முடிகளைத் தெரிவிக்கின்றது. இது சுத்தாத்வைத பிரஹ்மவித்தியா குருபரம்பரை. உபநிஷத்துக்களில் பிரஹ்மவித்தியா பரம்பரை மற்றொரு வகையாய்க் கூறப் பட்டிருக்கின்றது. ஸ்ரீவித்யா சாஸ்திரங்களில் மற்றும் வேறொரு வகையாகவுங் கூறப்பட்டிருக்கின்றது.

ஞானசார்ய பரம்பரை, ஆதிமுதல் அந்தம் வரையில் தெரியாமற் போனாலும், ஸாதகனுக்குத் தனது குரு, பரம

குரு (குருவுக்குக்குரு), பரமேஷ்டிகுரு (பரமகுருவுக்கு குரு) இவர்களின் நாமதேயங்களாவது நன்கு தெரிந்து இருத்தல் அத்தியாவசியம். ஸ்வகுரு ஆத்மதத்துவ ஸ்வரூபராய் மானவ ஓகத்தோடும், பரமகுரு வித்யாதத்துவ வடிவினராய் ஸித்த ஓகத்தோடும், பரமேஷ்டிகுருவானவர் சிவதத்துவ அபின்னராய் திவ்விய ஓகத்தோடும் ஐக்கியப்படுதலால் இம்மூவரின் ஞானமே ஸம்பூர்ண குரு மண்டல ஞானத்தை யளிப்பதாகக் கருதப்படுகின்றது.

ஸ்ரீவித்யா குருபரம்பரையில் ஆதியாக ஸ்ரீமஹாதேவரைக் கூறினேம். இந்த விஷயம் காமகலா விலாஸத்தில் நன்கு கூறப்பட்டிருக்கின்றது.

श्रीनाथ निरूपणम्

सत्यं ज्ञानमनन्तं ब्रह्म । आनन्दो ब्रह्म ।
[illegible], सर्वद्रष्टारं, सर्वसाक्षिणं,
सर्वग्राहकं, सर्वप्रकाशकं, सच्चिदानन्द
एकरसमेवायमात्मा ; स [illegible] [illegible] [illegible],
सत्या, [illegible], निरञ्जनो [illegible] आनन्दः परः ।
इत्यादि उपनिषद् [illegible], [illegible] [illegible]
[illegible] प्रकाश विमर्शात्मक परमेश्वर एव, पर
कारुणिकः स्वयमेव, स्वात्मानं, कामकला [illegible]
रूपेण कामकामेश्वरी रूपेण [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] संरक्षति

தா தீரூ்ம் ‖ உபநிஷத்துக்களில், ஸத்து, சித்து, ஆநந்தம், அநந்தம் என்பனவாதிகளால் நிர்த்தேசிக்கப்பட்ட சுத்தப் பிரஹ்மமானது, காமேஸ்வர காமேஸ்வரிகளாகப் பவித்து அவர்களுள் ஒருவருக்கு மற்ருருவர் குருவாகி, திவ்விய ஸித்த மானவ மென்னும் பெயரையுடைய குருபரம்பராக் கிரமத்தைப் பக்திமான்களைச் சம்ரக்ஷிக்கும் பொருட்டு இவ்வுலகில் பரவச்செய்து நிலை நிறுத்தினார்கள். இந்த காம காமேஸ்வரர்கள் பிந்துபீடத்தில் அதிஷ்டிதர்களா யுள்ள வர்கள்.

ஸூவீந: ஸ்ரீவீரே க்ருதயுகாதௌ மஹாமஹிம்நோ வா
விஷ்ணாம் |
தஸ்மை ஸ்ரீஶம்பவே காமேஶ்வர்யை விமர்ஶாய
ரூபிணே ‖

ஸ்ரீசக்கரத்தின் மத்தியத் திரிகோணத்தின் நடுவிலுள்ள ஸ்ரீபீடமென்னும் மஹோட்யாண பீடத்திலுள்ள மஹா காமேஸ்வரர், தனது விமர்ச சக்தியான மகா காமேஸ்வரிக்கு ஆதி யுகமாகுங் கிருதயுகத்தில் ஆத்ம வித்தையை யுபதேசித்து ஆதிகுருவானார். இவருக்குச் சர்யாநந்தநாதர் என்று பெயர். ஸ்ரீ வித்யாநந்தநாதர், ஸ்ரீபரமசிவாநந்தநாதர் முதலிய பெயர்களும் இவருக்கே உண்டென்று தக்கப் பிரமாணங்களால் ஏற்படுகின்றன.

குரு ஸார்வ பௌமராகிய இவர், இரண்டாவது யுகமாகிய திரேதாயுகத்தில் ஸ்ரீ ஊர்த்வாநந்த நாதரென்னும் உட்டீசாநந்த நாதருக்கும், துவாபரயுகத்தில் ஷஷ்டீசாநந்த நாதருக்கும், கலியுக ஆரம்பத்தில் மித்ரேசாநந்தநாதருக்கும் ஸ்ரீ ஆத்மவித்தையை உபதேசித்தருளினரென்பது, "ஸ்ரீஜத்ரேதயாயி வதீந வஸீக்ஷ்ணாம் விஷ்ணாம் ஷூகாஶயாஸேவ ஸநந்தநோவ த்ரேதயம் ஸஃ

நாஹ்ருஹீதம் ம[illegible]ரோவிதை:” என்னும் பிரமாணத்தால் நன்கு புலப்படுகின்றது. திரேதாயுக குருவாகிய உட்டீசாநந்த நாதர், துவாபரயுக குருவாகிய ஷஷ்டீசாநந்தநாதர், கலியுக குருவாகிய மித்ரேசாநந்த நாதர் இம்மூவரும் முறையே சிவ, வித்யா, ஆத்ம தத்வ ஸ்வரூப சக்தி, காமராஜ, வாக்பவ பீஜங்களின் அதிபதிகளாய் விளங்குகின்றார்கள். இவர்கள் ஒகத்ரய ஸ்வரூப குருமண்டல நாதர்களுக்கு உபதேசித்துக் குருகுலத்தை விருத்தி செய்தார்கள் என்று காமகலா விலாசம் கூறுகின்றது.

இங்ஙனமாயின் ஸ்ரீ சக்கிர மத்தியத் திரிகோண ரூப காமகிரி, பூர்ணகிரி, ஜாலந்தரம் என்னும் மூன்று பீடங்களில் நித்திய ஸாந்நித்தியராய் உள்ள மித்ரேசர் முதல் மூவரும் குருமண்டலத்தில் உள்ள ஒகத்திரய குரவர்களும் திரேதாயுகத்தில் இருப்பதற்கு நியாயமில்லை. ஆகவே ஸ்ரீ சக்கிரத்திற்கும், சக்ராதிஷ்டான தேவதைகளுக்கும் இவைகளைப் பிரதிபாதிக்கும் சுருதிகளுக்கும் அநித்யத்துவம் ஏற்படுகின்றது. ஆதலின் ஒவ்வொரு யுகத்தில் ஒவ்வொருவருக்குஉபதேசிக்கப்பட்டதென்பது பொருந்தாது.

இது நியாயமே. இங்கே யுகமென்பது நம்மால் விவகரிக்கப்படும் காலமன்று. காலத்தின் அதிசூக்ஷ்மதமமாகிய ஒருத்ருடியிலும் கிருதாதி நான்கு யுகங்களும் உண்டு. காலத்தின் அங்கங்களாகும் விநாடி, கடிகை, முஹூர்த்தம் முதலிய ஒவ்வொன்றிலும் கிருத, திரேத, துவாபர, கலியுகபாகங்கள் உண்டு. ஆதலின் பரப்பிரஹ்மம் காமகலா ஸ்வரூபங்கொண்டு சப்தரூபமும் அர்த்த ரூபமுமான சிருஷ்டியை யெந்தக்காலத்தில் செய்ததோ அந்த க்ஷணத்தின் முதலாவது பாகம் கிருதயுகம், இரண்டாவது பாகம் திரேதாயுகம், மூன்றாவதும் நான்காவதும்

துவாபர, கலியுகங்களாகும் என்று அறிவது அவசியம் சிருஷ்டியின் ஆதியை அறிதற்குக்கூடாதாதலின் சிருஷ்டி அநாதி. ஸ்ரீசக்கரத்திலுள்ள குருமண்டலமும் அநாதியே யென்பதற்கு யாதோராக்ஷேபணையு மின்று. ஸ்ரீசக்கரத்திலுள்ள ஒகத்திரயத்தோடு நம்முடைய குருத்திரயம் ஐக்கியப்படுதலால் நமது குருபரம்பரையும் அவிச்சின்னமாகவே யிருக்கின்றது.

இனி குரு பாதுகா மந்த்ரத்தின் விமர்சம் செய்யப்படுகின்றது. குரு, பரமகுரு, பரமேஷ்டிகுரு என்னும் குருத்ரயத்தோடு சேர்க்கப்பட்டு விளங்குவது பாதுகா மந்த்ரமாகும். ஆதலின் பாதுகா மந்த்ரத்திலேயே குரு பரம்பரை விளக்கமாகின்றது. இந்த மந்த்ரம் பிரஹ்ம வித்யாதீக்ஷையில், முதலில் உபதேசிக்கப்படுகின்றது.

பாதுகா யென்றால் என்ன ?

𑌪𑌾𑌦𑌨𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌰𑌿𑌤𑌕𑍍𑌷𑌾𑌲𑌨𑌾𑌤𑍍 𑌤𑍇𑌨 𑌹𑍇𑌤𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 ।
𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌾𑌚𑍍𑌚 𑌪𑌾𑌦𑍁𑌕𑍇𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

என்னும் பிரமாணப்படி, ஸாதகனுகிற முமுக்ஷுவின் ஸகல பாபங்களையும் போக்கி, ஜனன மரணமென்னும் மஹா பயத்தினின்றும் காப்பாற்றி அவன் அதிக ஆவலோடு இச்சிக்கும் மோக்ஷத்தை யளிப்பதால் **பாதுகை** யென்று அழைக்கப்படுகிறது.

பாதுகா மந்த்ரஸ்வரூபம்

*𑌤𑌾𑌰𑌤𑍍𑌰𑌿𑌤𑌯 𑌗𑍁𑌰𑍁𑌰𑍀𑌶 𑌸𑍋𑌹𑌂 𑌹𑌂𑌸𑌶𑍍𑌶𑌿𑌵𑌾𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌦𑍂
𑌪𑍂𑌕𑍍𑌷𑌾𑌢𑍍𑌯 ।
𑌸𑍍𑌵𑌾𑌦𑌶 𑌬𑍀𑌜𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍂𑌹 𑌨𑌾𑌥𑌵𑌟𑍍 𑌪𑌾𑌦𑍂
𑌕𑌾𑌂 𑌵𑌦𑍇 ॥

---

* இந்த சுலோகம், இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட ஸ்ரீ குருவார்யாஸ்தவத்திலுள்ளதாகும்.

என்னும் சுலோகத்தினல் ஸ்ரீகுரு பாதுகா மந்த்ரஸ்வரூபம் கூறப்படுகின்றது.

த்ரிதாரீ யென்னும் மூன்று விமர்சப் பிரணவங்களோடு, குமாரீ யென்னும் பாலா பீஜங்கள் மூன்றும், ஹம்ஸ ஶ்ஶிவஸோஹம்—ஸோஹம் ஹம்ஸஶ்ஶிவ:—ஹம்ஸ ஶ்ஶிவஸோஹம் ஹம்ஸ: என்னும் மஹா வாக்கியங்களும் ஹ்-ஸ்-வ்-ரெம் - ஹ் - ஸ் க்ஷ்-ம்-ல்-வ்-ர்-யூம்- என்னும் பன்னிரண்டு பீஜங்களுங் கூடியது பாதுகா மந்த்ரமாகும். பாதுகை யென்பது பாதங்களைத் தாங்கும் பாதக்குறடு அல்லது பாதரக்ஷையாகும். பாதுகைக்குத் தன்னை யாராதிக்கும் ஸாதகனைத் தரணம்செய்யும் சாமர்த்தியம் உள்ளது ஸத்குருவின் பதகமலத்தின் ஸாங்கத்யத்தினலேதான் என்றறியத்தக்கது. குரு சரணவைபவம் மனே வாக்குகளுக்கு எட்டாத விஷயமாகும். "பாதோऽஸ்ய விஶ்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" பிரஹ்மாபின்ன ஸத்குருவின் ஒருபாதம் அவித்யா வசத்தரான ஸாதகர்களின் பொருட்டுள்ள தாகும். த்ரிபாத்விபூதி மஹா நாராயணோபநிஷத்தில், பிரஹ்மத்திற்கு அவித்யா பாதம், வித்யாபாதம், ஆநந்தபாதம், துரீயபாதம் என நான்கு பாதங்கள் உள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. இங்கே பாதம் என்பது (பதம்) அடைய வேண்டிய இடத்தை அடைவிப்பது என்னும் அர்த்தத்தில் வந்ததாகும்.

ஸத்குருவானவர் சிஷ்யனுக்கு வித்தையை உபதேசித்து அவனை அவித்யா பாதத்தினின்றும வித்யா பாதத்திற்கு ஏற்றி, வித்யாபாதத்தில் பிரஹ்மாபின்ன அஹங்கிரஹோபாஸனரூப மனன நிதித்யாஸனங்களின் மூலமாய் ஸவிகல்ப ஸமாதிரூப ஆநந்தபாதத்தை யடைவிக்கிறர்; பின்னர் துரீய பாதமும் அடையப்படுகின்றது. இதுவரையில் சத்குருவின் கடாக்ஷம் அத்தியாவசியம்.

குரு மஹாவாக்யோபதேஷ்டா. ஆதலின் குரு பாதுகா மந்த்ரமும் மஹா வாக்ய துல்யமாகத்தான் இருத்தல் வேண்டும்.

பாதுகா மந்த்ரார்த்த விசாரம்

இம் மந்த்ரத்தின் முதலிலுள்ளது மூன்று பிரணவங்கள். பிரணவம் ஒன்றுதானே ? மூன்று பிரணவங்கள் எப்படி வந்தன ? எனின், பிரஹ்மப் பிரணவமான பிரகாசப் பிரணவம் ஒன்றுதான். இதுதான் பிரஹ்மத்தின் வாசகம். வாசகம் தனது சக்தி விருத்தியினாலல்லாமல் லக்ஷணாவிருத்தியால் பிரஹ்மத்தைக் குறிக்கின்றது. லக்ஷணா விருத்திக்குத்தான் அகண்டாகார விருத்தியென்று மற்றொரு பெயர். இதுதான் விமர்சவடிவம். பிரஹ்மம் பிரகாச விமர்ச வடிவமாயிருப்பினும், இவ் விமர்சாம்சம் ஸாதகனுக்குத்தான் மிகவும் உபயோகமா யிருக்கின்றது. விமர்சத்தின் பாரமார்த்திக தத்துவம் ஸாதகனுடைய ஆத்மஸ்வரூபத்தைப் பிரஹ்மத்தோடு ஐக்கியப்படுத்துதலே யாகும். ஆதலின், எங்ஙனம், பரமாத்ம ஸ்வரூப தத்பதத்தின் வாசகம் "ஓம்" என்னும் பிரகாசப் பிரணவமோ அங்ஙனமே ஜீவாத்மாவாய் உள்ளபோது துவம் பதத்தின் வாசகம் விமர்சப் பிரணவமென்று கூறப்படும். இவ்விமர்சப் பிரணவத்தின் லக்ஷ்யார்த்தம் கூடஸ்த ஸ்வரூப பிரத்யக் ஆத்மாவாகும். இவ் விமர்சப் பிரணவங்கள் ஐந்து ஆகும். இவ் வைந்து விமர்சப் பிரணவங்களும் ஒரு ஜீவனது ஜாக்கிரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி, துரீயம், துரீயாதீதம் என்னும் ஐந்து அவஸ்தைகளில் விளங்கும் விஸ்வன் தைஜஸன், பிராக்ஞன், ஸாதகன் அல்லது அப்பியாஸி ஆரூடன் அல்லது பிரௌடன் என்னும் ஐந்து நிலைகளைத் தெரிவிக்கின்றன. ஆதலின் விமர்சப் பிரணவங்கள் பலவாய்த்தான் இருக்கும்.

ஸாதாரணமாய் எல்லா ஜீவர்களுக்கும் ஜாக்கிரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி யென்னும் மூன்று அவஸ்தைகளே அநுபவத்தில் இருப்பதால், அவற்றைக் குறிக்கும் மூன்று பிரணவங்களே குரு பாதுகையின் முதலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவை ஐம்-ஹ்ரீம்-ஸ்ரீம்- என்பனவாகும். துரீய, துரீயாதீதங்களாகும் மற்ற இரண்டு (அவஸ்தைகளின்) பிரணவங்கள் ஹ்ஸௌ:—ஹ்ஸ்ஃப்ரேம் என்பனவாம்.

விமர்சப் பிரணவங்களின் அர்த்த விசாரம்

ஐம் என்னும் பீஜமானது வாக்பவ பீஜமெனப்படும். வாக்பவமென்றால் எல்லா வாக்குகளும் அதாவது வேதங்களும் எங்கிருந்து உண்டாயினவோ அந்த ஸ்தானம் என்று பொருள். இந்த வாக்பவ பீஜமான ஐம் என்பது அகார, இகார, அகார, (பிந்து) அநுஸ்வாரங்களின் சேர்க்கையால் உண்டானதாகும். "அக்நிமீளே புரோஹிதம்" என்று ருக்வேதம் ஆரம்பிப்பதால் முதல் அகாரம் ருக்வேதத்தைக் குறிக்கின்றது. இரண்டாவது இகாரமானது "இஷேத்வோர்ஜேத்வா வாயவஸ்தோ பாயவஸ்த:" என்னும் யஜுர்வேத ஸூசகமாகும். மூன்றாவதாயுள்ள அகாரமோ "அக்ந ஆயாஹி வீதயே" என்னும் ஸாமவேதத்தைத் தெரிவிக்கின்றது. நான்காவதாயுள்ள பிந்து 'ஶந்நோ தேவீ ரபிஷ்டயே" என்னும் அதர்வண வேதத்தின் ஸூசகமாகும். ஆகவே ஐம் என்பது சதுர்வேத ஸ்வரூபமாகும்.

த்வைத விருத்தியோடு கூடிய ஜாக்கிரத் அபிமானியான விஶ்வன், "ஶாஸ்த்ரயோநித்வாத்" என்னும் சாஸ்த்தப்பிரமாணப்படி வேதங்களால் தத் பத வாச்யனான பரமேஶ்வர ஸ்வரூபத்தை விமர்சம் செய்கின்றான்.

ஹ்ரீம் என்னும் பீஜமானது ஸ்வப்நாவஸ்தையோடு கூடியுள்ள தைஜஸன் ஸாக்ஷி விருத்தியினால் கல்பிதமாயுள்ள அக்னீஷோமாத்மக போக்தா, போக்ய, போக ரூப ஸ்வப்நப் பிரபஞ்சத்தை விமர்சிக்கின்றான். இந்த "ஹ்ரீம்" பீஜத்தில் ஹ என்பது சிவபீஜம். ஆதலின் ஸோமஸ்வரூபம். "ர" என்பது அக்னி பீஜம். இந்த ஸோமாக்னிகளின் ஸாமரஸ்ய வடிவ பிரகாச விமர்சாத்மக காமகலையே "ஈம்" என்பது ஆகும்.

மூன்றாவது ஸ்ரீம் பீஜமாகும். இது, ஸுஷுப்தியபிமானியான பிராக்ஞன், தனது ஆனந்த ஸ்வரூபத்தை விமர்சம் செய்வதைக் குறிக்கின்றது. ஶம்- ஸுகம், ஆநந்தம், ராதி-ததாதி கொடுக்கிறது. எதனுடைய ஆநந்தத்தை? ஈஷ்-ஶாஜகாம்பரீ நீராஜவ ஸுஹம் வதிவக்ஷ்ராயம் ஸ்ரீத்ராநந்த:. ஸுஷுப்திக்கு ஸம்பிரஸாதாவஸ்தை யென்றும் மற்றொரு பெயருண்டு. ஆத்மாநந்தமானது நன்றாய் அநுபவிக்கப்படுவதால் இந்தப் பெயர் ஏற்பட்டது—துரீய, துரீயாதீதப் பிரணவங்களின் அர்த்தம் பின்னர் கூறப்படும்.

குமாரீ பீஜார்த்த விசாரம்

ஐம்-க்லீம்-ஸௌ:—முதல் பீஜம் தத்பத லக்ஷ்யார்த்தத்தையும், இரண்டாவது துவம் பத லக்ஷ்யார்த்தத்தையும், மூன்றாவதான சக்தி பீஜமானது அஸிபத வடிவ ஐக்கியத்தையும் குறிக்கும் மஹாவாக்கிய வடிவமென்பது ஸங்கிரகமான அர்த்தமாம்.

இக்குமாரீ பீஜங்களுக்குப் பின்னர் (1) ஹம்ஸஶ்ஶிவ ஸோஹம்- என்றும் (2) ஸோஹம் ஹம்ஸஶ்ஶிவ:- என்றும் (3) ஹம்ஸஶ்ஶிவ ஸோஹம் ஹம்ஸ: என்றும்

கூறப்படும் மூன்று மஹா வாக்கியங்களும் முறையே (1)ஸ்வகுரு (2) பரமகுரு (3) பரமேஷ்டி குரு பாதுகா மந்த்ரங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதுவுமன்றி ஸ்வகுரு பாதுகா மந்த்ரத்தில் "𑌸𑍍𑌵𑌰𑍂𑌪 𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌹𑍇𑌤𑌵𑍇 𑌶𑍍𑌰𑍀𑌗𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃" என்றும், பரமகுருபாதுகையில், "𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑌿𑌮𑌰𑍍𑌶 𑌹𑍇𑌤𑌵𑍇 𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌮 𑌗𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃" என்றும், பரமேஷ்டி குரு பாதுகையில் "𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌰𑌾𑌮 𑌪𑌞𑍍𑌜𑌰 𑌵𑌿𑌲𑍀𑌨 𑌤𑍇𑌜𑌸𑍇 𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌗𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃" என்றும் மூன்று மந்த்ரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது ஸம்பிரதாய ஸித்தாந்தமாகும். ஸ்வரூபநிரூபணஹேதுவாகும் துவம் பத லக்ஷ்யார்த்த ஸ்வரூபம் ஸத்குரு ஸ்வரூபத்திலும், ஸ்வச்சப்பிரகாச விமர்சஹேதுவாகும் தத்பத லக்ஷ்யார்த்த ஸ்வரூபம் பரமகுரு ஸ்வரூபத்திலும், ஸ்வாத்மாராம பஞ்சரவிலீன தேஜஸ்ஸாகும் அஸிபதத்தின் அகண்டார்த்தம் ஸ்ரீபரமேஷ்டிகுரு ஸ்வரூபத்திலும் ஸமன்வயமாகின்றன. இதனால் குருத்திரய ஸ்வரூபமானது தத்துவமஸி, பிரக்ஞானம் பிரஹ்ம, அயமாத்மா பிரஹ்மா; அஹம்பிரஹ்மாஸ்மி என்னும் மஹா வாக்கியஸ்வரூபமாயுள்ளதென்பது பரம ரஹஸ்யமாகும். இவற்றின் விசேஷ ரஹஸ்யங்களை குருமுகமாய் அறியவும்.

"𑌹𑍍𑌸𑍌𑌃" என்னும் பீஜமானது துரீயப் பிரணவமாகுமென்று முன்னர் கூறப்பட்டது. பிரகாச விமர்ச ஸ்வரூப அதிஷ்டான சித்சக்தியினின்றும் தோன்றிய மாயா விலாஸமான ஸர்வப் பிரபஞ்சத்தினின்றும் நாமரூபங்களை நிவர்த்திசெய்து, அகண்டமாயுள்ள அஸ்தி, பாதி, பிரிய வடிவ சிவதிருஷ்டியை யுண்டாக்குவது இந்த துரீயப்பிரணவத்தின் திரண்ட பொருளாகும்.

த்வாதஶ பீஜார்த்த விமர்சம்

ஹ ஸ-வ-ஷௌ்ரம்- இவை நான்கு பீஜங்கள். ஹ-ஸ-க்ஷ-ஈ-ஞ-வ-ர-யூம் என்பவை எட்டு பீஜங்கள். ஆக பன்னிரண்டு பீஜங்கள். ஹ்ஸ்வ்ஷௌ்ரம் என்பது கேசரீ பீஜமாகும். வெ-ஷூஹணி, வாதீகி-வெவரீ- இது பிரஹ்மத்திலேயே ரமித்துக் கொண்டுள்ள ஸமாதி நிலையைத் தெரிவிக்கின்றது.

ஹ்-பரமேஶ்வரன், ஸ்-சக்தி, வ-சுத்தப் பிரஹ்மம். தத்பத லக்ஷ்யார்த்தத்தை துவம்பத லக்ஷ்யார்த்தத்தோடு ஐக்கியப்படுத்தினால் சுத்தப்பிரஹ்ம அத்வைத நிலை வெளியாகின்றது. இந்நிலையை அடைதற்கு ஸாதனமாயுள்ளது ஷௌ்ரம் என்பது. ஷ என்பது வாம பாகத்தைக் குறித்து நிவிருத்தி ஞானத்தை ஸூசிக்கின்றது. ர என்னும் அக்ஷரமானது ஐக்கிய விமர்சத்தையும், ஔம் என்பது ஆதார ரூப ஸத்தாஸ்பூர்த்தியையும் தெரிவிக்கின்றன. ஆதலால் கேசரி பீஜமானது பிரகாச விமர்ச வடிவமாயுள்ள பிரஹ்ம ஸ்வரூபத்தை அதத் வியாவிருத்தி வடிவ அந்தர்முக (நிவர்த்தி) விருத்தியால் அல்லது அகண்டாகார விருத்தியினால் அபரோக்ஷமாய் அறிந்து தன்னையும் (ஸாதகனையும்) பிரபஞ்சத்தையும் ஐக்கியம் செய்வதை யுணர்த்துகின்றது.

ஹ்-ஸ்-க்ஷ்-ஈ-ஞீ-வ்-ரீ-யூம் என்பவை எட்டு பீஜங்கள். இவற்றோடு கேசரீ பீஜங்கள் நான்கும்சேர்ந்து பன்னிரண்டு பீஜங்கள் குருபீடத்தின் கமலத்திலுள்ள பீஜங்களாகும்.

விலஸித ஸுதாம்சு தவளத்யுதி ஹம்ஸகலாஸ்ய ஸ்வாவிர
சித மணி பீடம் |
த்வாதசதள ஸரோஜே ஸ்ரீதேசிக ராஜஸ்ய சரணாவவ
லம்பே ||

ஆக்ஞா சக்கிரத்திற்கு மேல் இருக்கும் பிரஹ்ம ரந்திரத்தில், ஸஹஸ்ர தள கமலத்தில், தத்துவாதீத நிருபாதிக குருஸ்தானம் உள்ளதென்றும் அக்குரு ஸ்தானமாகிய மாத்ருகா பீடத்தில், பன்னிரண்டிதழ் கமலத்தில், மேற்கூறிய பன்னிரண்டு பீஜங்கள் விளங்கும் என்றும் முன்னர் கூறப்பட்டது. இப்பன்னிரண்டு வியஷ்டி பீஜங்களில் நான்கின் ஸமஷ்டி கேசரீ பீஜமென்றும், எட்டின் ஸமஷ்டி ஆநந்த பைரவ பீஜமென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வாநந்த பைரவ பீஜமே நவநாத பீஜமென்றும் கூறப்படும்.

நவநாத பீஜங்களின் அர்த்த விமர்சம்

ஸ்ரீ குரு ஸ்வரூபமானது அஞ்ஞான நிவர்த்தகமும் தத்துவ ஞான பிராப்தகமுமாம். ஞானத்தாலன்றி அஞ்ஞான நிவர்த்தி சம்பவியாது. இந்த ஞானமும் பரோக்ஷம், அபரோக்ஷம் என இருவகைத்து. இங்கு ஞானமென்பது ஆத்மா அல்லது பிரஹ்ம ஞானமேயாகும். அநாத்ம வடிவ நாம ரூப பிராபஞ்சிக ஞானமல்ல. ஆத்மஸ்வரூப பிரஹ்மம் சப்தப் பிரமாணம் ஒன்றைத்தவிற மற்றொரு பிரமாணத்தால் அறியத்தக்கதல்ல. ஆதலின் பிரஹ்மாபின்ன ஆத்ம ஸ்வரூப போதக சப்த ஸ்வரூபமே ஸ்ரீ குருமூர்த்தியின் சிறந்த வடிவம் என்று ஏற்படுகின்றது. அவாந்தர வாக்கிய ரூப சப்த வடிவ குருவினால் பரோக்ஷ ஞானமும், ஜீவப் பிரஹ்மைக்கிய வடிவ மஹாவாக்கிய ஸ்வரூப சப்தமாகும் குருவினால் அபரோக்ஷ ஞானமும்

உண்டாகின்றன. இந்த சப்தமோ ஆகாசத்தின் குணம். ஆகாசம் மூன்று வகைப்படும். அவை பூதாகாசம், சித்த ஆகாசம், சிதாகாசமாம். இவை, முறையே விசுத்தி (கண்டம்), ஆக்ஞை (புருவமத்தி), ஸஹஸ்ராரம் இவைகளில் விளங்குகின்றன. நாம் இப்பொழுது சிதாகாசத்தைப்பற்றி விமர்சிப்போம். மேற்கூறிய மூன்று வகையான ஆகாசங்களினுடைய சப்தங்களின் அர்த்த விமர்சம், (பூதாகாச சப்தார்த்தம்) துவைத விருத்தி, (மனாகாச சப்தார்த்தம்) ஸாக்ஷிவிருத்தி, (சிதாகாச சப்தார்த்தம்) அகண்டாகார விருத்திகளால் ஏற்படுகின்றன. இச்சிதாகாசமும் அதிஸூக்ஷ்மமான ஒன்பது வகையுபாதிகளால் விளங்குகின்றதென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வொன்பது உபாதிகளும் ஆஞ்ஞைக்கு மேல் ஸஹஸ்ராரம் வரையில் ஒன்பது ஸ்தானங்களில் இருக்கின்றன. இவை பிந்து, அர்த்தசந்திரன், ரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபிகை, ஸமனை, உன்மநி, என்பனவாம். இவ்வொன்பது வகையான அதிஸூக்ஷ்மோபாதிகளை யதிஷ்டித்து சிவதத்துவ ஸ்வரூப அகண்டாகார விருத்தி வடிவ, ஜீவப்பிரஹ்மாபேதபோதக, அபரோக்ஷ ஞானப் பிரதாயக மஹா குரு விளங்குவார். இவ்வுபாதிகளோடு சேர்ந்தவர்களே நவநாதர்களாவர்.

விசேஷ பிரஹ்மஸ்வரூப ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் நவவீரர்களும் இவர்களே. நவவித ஸமாதி விருத்திகளை யுண்டு பண்ணுபவர்களும் இவர்களே.

உமை, ஹைமவதீ என்னும் சிற்சக்தியின் பாதச் சிலம்பின் நவரத்தினங்களினின்றும் தோன்றிய ஒன்பது சக்திகளிலிருந்தும் பிறந்தவர்கள் வீரபாஹு முதலிவர்களாகும். சிற் சக்தியின் பாதச் சிலம்புகளே வேதங்கள் என்பது சாஸ்திரப் பிரஸித்தம். அவற்றின் மணிகளே

உபநிஷத்துக்கள். அவற்றினின்றும் பிறந்த நவவீரர்கள் ஜீவப் பிரஹ்மைக்கிய போதக அகண்டாகார விருத்தி ஸ்வரூபர்களென்பது பரம தத்வ ரஹஸ்யார்த்தமாகும்.

ஆஞ்ஞைக்குமேல் பிரஹ்மரந்திரம் வரையிலுள்ள பிந்து, அர்த்தசந்திரன் முதலிய ஒன்பது சிதாகாச ஸ்தானங்களில், கடைசியதான உன்மனீ ஸ்தானமானது மனோ வாக்குக்களுக்கு எட்டாததாகையால் அதை ஸமநா ஸ்தானத்தில் சேர்த்து எட்டாகக் கணக்கிடப் பட்டு, அவை ஹ, ஸ, க்ஷ, ம, ல, வ, ர, யூம்-என்னும் எட்டு பீஜங்களால் கூறப்பட்டிருக்கின்றனவென்று ஸ்ரீ ரஹஸ்ய தந்திரத்தில் பிரதி பாதிக்கப்பட்டிருக் கின்றது.

இங்ஙனம் மேற்கூறிய எட்டு பீஜங்களால் பிந்து ஆகாசாதிஷ்டித குரு முதல் ஸமநாகாச அதிஷ்டித குரு வரையில் உள்ள எட்டு குருஸ்வரூப அகண்டாகார விருத்திகளோடு துரியாதீத பிரணவ லக்ஷ்யார்த்தமாகும் பிரஹ்மத்திலேயே ஸதாவிஹரித்துக்கொண்டுள்ளதென்று பொருள்படும் வெவ்ரீ பீஜங்களாகும் ஹ ஸ வ ஹ்ரௌம் என்னும் நான்கு பீஜங்களோடும் விளங்குவது துவாதச தளகமலமென்னும் குருஸ்தானம் என்று ஒருவாறு சுருக்கமாய்க் கூறப்பட்டது. இதுதான் துரீயாதீதப் பிர ணவமாகும்.

இக்கமலத்திற்குள் "ஹம்ஸ:" என்னும் இரண்டு பீஜங்கள் விளங்கும். இவைகள்தான் குருபாதுகைகள் இவற்றில் ஒன்று பிரகாசபாதுகை—மற்றொன்று விமர்ச பாதுகை-இவைகளே சிவசக்தி ஸ்வரூபம்; ஸோம அக்னி ஸ்வரூப அக்நிஷோமீயமும் இவையே. இவற்றின் ஸ்வ ரூபத்தை நன்கு அறிந்து இவற்றிற்கு மத்தியில் விளங்கும் உ-ஷிகாக்ஷரமாகும் பிந்துவில் ஐக்கியமுற்றவர்களே பரம

ஹம்ஸ ஸந்நியாஸிகள். ஜீவன் முக்தர்களும் இவர்களே யாவர். இங்ஙனம் ஸ்ரீ குரு பாதுகா மந்திரம் அர்த்தத்துடன் விமர்சம் செய்யப்பட்டது. இனி குரு ஸ்வரூபத் தியானஞ்செய்யும் விதத்தை விசாரிப்போம்.

ஸ்ரீ குரு ஸ்வரூபத்தியான விசாரம்

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

இதுகாறும் ஸ்ரீ குருபாதுகா மந்த்ர விசாரம் செய்யப்பட்டது. ஸ்ரீ குருபாதுகா மந்த்ரமானது பரம்பரா ஞானத்தை ஆதாரமாக வுடையதாகும். பரம்பரை ஞானமோ, குரவர்களின் கார்ய கரண ஸங்காதமான தேகத்தையும் பெருமைகளையும் குறிக்கும். ஆனல் குரு தத்துவமோவெனின் சுத்தப் பிரஹ்மஸ்வரூபத்திற்கு வேறல்லாமல், தேசகால வஸ்து பரிச்சேதமற்றதாய், மனோ வாக்குகளுக்கு எட்டாததொன்ருகும். ஆதலின், குரு ஸ்வரூபம் தேசகாலவஸ்து பரிச்சேதமுடையசரீரமா? அல்லது அபரிச்சின்ன அகண்டைகரஸ சேதனமா? வென்னும் சங்கை நிகழுகின்றது. இச் சங்கைக்குச் சமாதானமாவது:—

குரு ஸ்வரூப பாவனை சரீர நோக்கிலுமுண்டு; சேதன நோக்கிலு முண்டு. சரீர நோக்கத்திலுள்ள குரு ஸ்வரூப பாவனையால்தான் சேதன வடிவ குருஸ்வரூப பாவனை திடமாதல் வேண்டும்.

குருஸ்வரூபம் பரம், அபரம் என இருவகைத்து பரம் சேதனவடிவம்; அபரம் சரீரவடிவம்; குரு ஸ்வரூபத்திற்கு அஞ்ஞான நிவர்த்தகமே சிறந்த லக்ஷணமாய் இருக்கின்றது. ஸ்வஸ்வரூபத்தின் அஞ்ஞான நிவர்த்தி சாப்த போதத்தினுல்தான் உண்டாகுமென்று முன்கூறப்பட்டது. சப்தம் முகத்தினின்றும் வெளிக்கிளம்பவேண்டும். ஆதலால் குரு ஸ்வரூபத்திற்குச் சரீரம் அத்தியாவசியமாய் வேண்டியதாயிருக்கின்றது.

तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् என்னும் சுருதியும் श्रोत्रियं, ब्रह्मनिष्ठं என்னும் விசேஷணங்களால் சரீரத்தோடு கூடிய குருவையே குறிக்கின்றது. குரூபஸதனம், குருபக்தி, குருசுஶ்ரூஷை, குருவாக்ய பரிபாலனம், முதலியவையாவும் சரீரஸஹித குரு தத்துவத்தில்தான் ஸாத்தியமாகும். குருநாம ஸ்மரணையும் குரூரூபத்தியானமும் சாஸ்திரங்களில் கூறியிருப்பது சரீர பாவத்திலேதான் என்று ஏற்படுகின்றது. நாமரூபமற்ற சேதனபாவத்தில் நாமஸ்மரணையும் ரூபத்தியானமும் எங்ஙனம் ஸாத்திய மாகும்? ஆகவே சரீர வடிவத்தில் தியேயமாயுள்ள குரு தத்வம் சேதனவடிவத்தில் ஞேயமாகின்றது. ஆதலின் குரு தியானம் அவசியம் செய்யத்தக்கது.

தியானம் என்பது மானஸிக கர்மமாகும். அதாவது ஒருருவத்தை மனத்தினுல் கற்பித்து அவ்வுருவத்தையே மனத்தினுல் தியானித்தலாகும். இக்கற்பனை, தியானம் செய்யும் புருஷனது அதீனத்தில் இருக்கின்றது. कर्तुं अकर्तुं, अन्यथाकर्तुं योग्यत्वात् कर्तृतन्त्रं। குறித்தபடி செய்யவோ, செய்யாமல் இருக்கவே அல்லது வேறு வகையாய்ச் செய்யவோ சாத்தியமாய்

இருப்பதனல் மானஸிககர்மமாகும் தியானம் கர்த்ருதந்த்ர மாகுமென்று சாஸ்திரங்கள் கூறும். ஞானமோ வஸ்து தந்த்ரமாகும். ஒரு கடத்தைப் பார்த்து வீட்டின் ஞான முண்டாகாது; கடம் என்னும் ஞானம் உண்டாகாமல் இருக்காது. ஆதலின் வஸ்துதந்த்ரம்|யதார்த்தமும், கர்த்ரு தந்த்ரம் அயதார்த்தமுமாகும். ஆகவே தியானம் அய தார்த்தம் என்று சித்திக்கின்றது. அயதார்த்த ஹூஜ ரூபமான தியானத்தினல் முமுக்ஷுவிற்கு என்ன பயன் ஏற்படும்? ஆகவே குரு தியானமும் பயனற்றதேயாகும் என்னும் சங்கை உண்டாகின்றது.

சமாதானம்:—ஹூமம் (ப்ரமம்) இரண்டு வகைப்படும். ஸம்வாதிப்பிரமம் ஒன்று. விஸம்வாதிப்பிரமம் மற்ருென்று. மணியினது பிரபை (ஒளி)யில் மணியென்னும் ஞானம் ஒன்று. தீபத்தின் பிரபையில் மணியென்னும் ஞானம் மற்ருென்று. இவ்விரண்டும் அத்தியாஸமேயாயினும் மணி யினது பிரகாசத்தை மணியென்று நினைப்பவனுக்கு மணி யின் லாபம் (அடைவு) ஏற்படுகின்றது. தீபத்தின் பிர காசத்தை மணியென நினைப்பவனுக்கு மணி எவ்வகையி லும் கிடைப்பதில்லை. ஆதலின் கருதியபொருளையடைவிப் பது ஸம்வாதி பிரமையாகும். பயனற்றதாய் ஒழிவது விஸம்வாதி பிரமையாகும். ஆதலின் ஶ்ருதி ஸ்மிருதி முத லிய பிரமாணங்களாலும், குருவின் உபதேசத்தாலும் சித் தித்தபடி செய்யும் தியானம் கருதிய பயனைத் தருவதாய் இருப்பதால், ஸம்வாதிப்பிரமையாய் இருக்கின்றது பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன், இந்திரன், ஸூர்யன், ஸரஸ்வதி, மஹாலக்ஷ்மி, காளி, ஷண்முகன், முதலிய தேவதைகளுக்கு ஸகுண ஸாகாரத்தியானம் சாஸ்திரங் களில் கூறப்பட்டிருக்கின்றது. அந்த அந்த தேவதையை அததற்கு ஏற்பட்ட தியானத்தின்படி தியானிப்பது அவசி

யம். மனதைத் தன்னிஷ்டப்படி கற்பிப்பதற்கு விடாமல், சாஸ்திரப் பிரமாணப்படி, ஒன்றை, ஒரே வகையாய்த் தியானிக்கப் பழக்கவேண்டும். எங்ஙனம் ஸாலக் கிராமத்தில் விஷ்ணு புத்தியும், பாணலிங்கத்தில் ஈஶ்வர புத்தியும் ஏற்படுகின்றனவோ, அங்ஙனமே குரு சரீரத்தில் பிரஹ்ம புத்தி ஏற்படுகின்றது. ஸாலக்கிராம, பாண லிங்கங்களில் தோன்றும் பிரத்தியக்ஷமான கல்லென்னும் ஞானமானது, தியேய ரூப பரோக்ஷ, விஷ்ணு, ஈஶ்வர ஞானங்களுக்குப் பாதகமாவதில்லை. ஆதலின் பிரத்தியக்ஷமாய்த் தோன்றும் துவைதப் பிரபஞ்சத்தில், பரோக்ஷ அத்வைதப் பிரஹ்மத்தைப் பாவிக்கலாம். பாவனை திடப்பட திடப்பட அத்தியஸ்த துவைத ஞானம் கிரமமாய் நசித்து அதிஷ்டான அத்வைதப் பிரஹ்ம ஞானம் ஏற்படுகின்றது. ஆதலின் குருத்தியானம் அவசியம் செய்யத்தக்கதேயாகும். குருவின் சரீர வடிவத்தை தியானிக்க வேண்டுமா அல்லது வேறு வடிவத்தைத் தியானித்தல் வேண்டுமாவெனின் சாஸ்திரங்களில் குருவை யெங்ஙனம் தியானிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றதோ அங்ஙனம் தியானித்தல் அவசியம். அது வருமாறு—

𑌶𑌿𑌵𑌰𑍂𑌪𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑌮𑍍॥
𑌦𑌯𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌸𑍍𑌮𑍇𑌰𑌾𑌸𑍍𑌯𑌂 𑌵𑌰𑌾𑌭𑌯𑌕𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌮𑍍॥

மங்களகரமான வடிவம், தூய்மையான வெள்ளை வஸ்திரம், வெண்மையான புஷ்பமாலை, வெண்மையான பூஷணங்கள், வெண்மையான சந்தனப்பூச்சு முதலியவைகள், கருணை கசிந்தொழுகும் பார்வை, புன்முறுவலோடு கூடிய முகம், வரதம் அபயம் என்னும் முத்திரைகளோடு கூடிய இரண்டு கர கமலங்கள் இவைகளோடு கூடித் தனது,

வாமாங்க ஸ்திதயா பீத வஸ்த்ராபரண வேஷயா ।

ரக்தவஸ்த்யா வாமகரே பத்மயா ஶக்த்யாலிங்கித விக்ரஹம் ॥

இடது துடையின்மேல் மஞ்சள் நிறத்தோடும், செந்நிற வஸ்திர புஷ்ப, ஆபரணுதி வேஷத்தோடும் தன் இடது கையில் ஒரு தாமரைப் புஷ்பத்தைத் தரித்துக்கொண்டுள்ள சக்தியை (குரு) தனது வலது கையினுல் ஆலிங்கனம் செய்துகொண்டு இருக்கும் வடிவத்தைத் தியானித்தல்வேண்டுமென்பதுசாஸ்திரப் பிரமாணமாம். இத்தகைய வடிவத்தோடுள்ள குருவைஎங்கே இருப்பதாக பாவித்தல் வேண்டுமெனின் ஸஹஸ்ராரம்புஜமாம் ஹ்ருஜ்ஜகர்ணிகா பீடவாஸிநம்-தியானம் செய்பவன் தனது பிரஹ்ம ரந்திரத்திலுள்ள ஸஹஸ்ர தள கமலத்தின் கர்ணிகையிலுள்ள (மாத்ருகா) பீடத்தில் வஸிப்பதாகத் தியானித்தல் வேண்டுமென்பது பிரமாணமாம். மேற்கூறிய குருத் தியானம், குருவின் சரீரத்தின் சிறப்பு லக்ஷணத்தோடு சேர்த்துக்கொண்டும் செய்யலாம்.

நாமரூப உபாதிகளோடு கூடிய ஸகுண ஸாகாரத் தியானம் செய்யச் செய்ய மனம் ஏகாக்ரப்பட்டு, தியேயம் நிலைக்கும். பின்னர் அஹங்கிரஹோபாஸனையின் அப்பியாச பலத்தால், நிருபாதிக ஆத்மாபின்ன பிரஹ்ம ஸ்வரூப குருமூர்த்தியின் பரதத்வத்தில்,தியானத்தின் பொருட்டாகக் கற்பித்த நாமரூப உபாதிகள் கொஞ்சங் கொஞ்சமாய்க் கழியும். இங்ஙனம் முற்றும் கழிந்த பின்னர்,நிருபாதிக குருஸ்வரூபம் எஞ்சி நிற்கும். இது தான் ஞேய ஸ்வரூபம். தியேயம் ஞேயமாய்த் தோன்றிய அந்த க்ஷணத்திலேயே ஞாதா, ஞானம், ஞேயம் என்னும் திரிபுடியின் பேதத் தோற்றம் ஒழிந்து அபேததர்சனம் ஏற்

படும். இந்நிலை தான் அகண்டநிலை ; இந்நிலை தான் குருவின் பரதத்வ ஸ்வரூபம்.

1. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌪𑌰𑌮𑌸𑍁𑌖𑌦𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂|
𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌾𑌤𑍀𑌤𑌂 𑌗𑌗𑌨 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑌾 𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍍 ||

𑌏𑌕𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌮𑌲 𑌮𑌚𑌲𑌂 𑌸𑌰𑍍𑌵𑌧𑍀𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌭𑍂𑌤𑌂
𑌭𑌾𑌵𑌾𑌤𑍀𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌰𑌹𑌿𑌤𑌂 𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌂𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿|

2. 𑌅𑌖𑌣𑍍𑌡𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌕𑌾𑌰𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌯𑍇𑌨𑌚𑌰𑌾𑌚𑌰𑌂 |
𑌤𑌤𑍍𑌪𑌦𑌂 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌂 𑌯𑍇𑌨𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 ||

3. 𑌆𑌨𑌨𑍍𑌦 𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌕𑌰𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌂
𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌨𑌿𑌜𑌭𑌾𑌵 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 |
𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑍀𑌡𑍍𑌯𑌂 𑌭𑌵𑌰𑍋𑌗 𑌵𑍈𑌦𑍍𑌯𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯 𑌮𑌹𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ||

4. 𑌹𑌂𑌸𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌪𑌤𑍍𑌰 𑌕𑌮𑌲𑍈𑌰𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌰𑍍𑌜
𑌗𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌂
𑌵𑌿𑌶𑍍𑌵𑍋𑌤𑍍𑌕𑍀𑌰𑍍𑌣𑌮𑍍 𑌅𑌨𑍇𑌕 𑌦𑍇𑌹 𑌨𑌿𑌲𑌯𑌂 𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌨𑍍𑌦 𑌮𑌾𑌨𑌨𑍍𑌦
𑌕𑌂 ||

𑌆𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍈𑌕 𑌮𑌖𑌣𑍍𑌡 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌨𑌾𑌦𑌸𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌹𑍃𑌨𑍍𑌨𑌂
𑌤𑌂 𑌗𑍁𑌹𑌂 |
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌕𑍍𑌷𑌰 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌗𑍁𑌰𑍁 𑌪𑌦𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌦𑍍𑌵𑌿
𑌭𑍁𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌮𑍍 ||

5. 𑌵𑌿𑌶𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑌮𑌾𑌦𑌿 𑌦𑍇𑌵 𑌮𑌮𑌲𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌪𑌰𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂
𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧 𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑌤𑍍𑌰 𑌕𑌮𑌲𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌾𑌕𑍍𑌷𑌰𑍇
𑌮𑌣𑍍𑌡𑌲𑍇 |

நித்யானந்தமயம் ஸாம்பைக நிலயம் நித்யம் ஶிவம் ஸ்வப்ரபம் |
த்யாயேதகண்டம் பராத்பரதரம் ஸச்சித் ஸ்வரூபாத்மகம் ||

6. ஊர்த்வாம்நாய குரோர்திவ்யம் த்ரிநயந நேத்ரம் காராவ்ய ஸிம்ஹாஸநம் |
ஸிதாம்பர ஸத்ஸுவேத பரிதம் ஷட்சக்ரஸஞ்சாரிணம்
கமலேஷ்ட ஸ்தாநஸ்தித ப்ரஹ்மாண்டம் ப்ரஸன்னம் ப்ரஹாஸோஹிதம் |
ஶாந்தம் ஶ்ரீ குருபாதபங்கஜம் ஹ்ருதயே ஸமேதம் வந்தே ஹ்ருதயம் ||

என்று குருகீதை கூறுவது குருவின் பரதத்வமான இந்நிலையைத் தான் என்றறிதற்பாலது.

ஸத்குரூபாஸனே ஶ்ரத்தாயஸ்யா ஹ்ருதி விஶேஷதா
ஸஸம்ஸாராம்போதிதரணே ஹேதுரேவ ந ஸம்ஶய: ||

என்னும் ஸ்மிருதிப் பிரமாணரீதியாய் எந்த முமுக்ஷு வான ஸச்சிஷ்யனனவன் இதுகாறும் கூறிவந்தபடி ஸ்ரீ குருதத்வத்தை நன்கு விமர்சித்து விதிப்படி உபா ஸிக்கின்றானோ அவன் ஸம்ஸார ஸாகரத்தைச் சந்தேக மின்றிக் கடந்து நித்தியாநந்தப் பெருவாழ்வாங்கரையை யடைகின்றான்.

சிவம்.

ஸ்ரீ குரு சரணார விந்தார்ப்பண மஸ்து ||

श्री गुरुचरणारविन्दाभ्यां नमः

श्रीमत्परदेवतायै नमः

॥ श्री गुर्वार्यास्तवः ॥

विधिबिलकमलान्तर्वसदकथहळक्षाख्यरुचिरमणिपीठे ।
द्वादशदळकमले श्री देशिकराजस्य चरणमवलम्बे ॥ 1.

तारत्रितयकुमारी सोऽहं हंसश्शिवाख्यमनुयुक्ताम् ।
द्वादशबीजैर्लक्ष्यां श्री गुहनाथस्य पादुकां वन्दे ॥ 2.

अग्नीषोमीख्यायां शुक्लारुणमिश्रबिन्दुलक्ष्यार्थाम् ।
हंसपदमुख्यरूपां श्री गुहनाथस्य पादुकां वन्दे ॥ 3.

आनन्दाकाररसामखिलमहादुरितनाशकद्वाराम् ।
शिवशक्त्यभेदरूपां श्री गुहनाथस्य पादुकां वन्दे ॥ 4.

षड्विधविकारहीनां नानाविधचित्रलोकसुविलासाम् ।
वेदान्ताऽमृतसिक्तां श्री गुहनाथस्य पादुकां वन्दे ॥ 5.

अष्टत्रिंशत्सकलां अग्न्यर्यमसोममण्डलप्रभवाम् ।
आम्नायशिखरवेद्यां श्री गुहनाथस्य पादुकां वन्दे ॥ 6.

विमृशप्रकाशरूपां विगताज्ञानस्वरूपमहिमाढ्याम् ।
शाम्भवदीक्षालभ्यां श्री गुहनाथस्य पादुकां वन्दे ॥ 7.

संसारार्णवपोतां समयमताचारभावनान्तस्थाम् ।
बदरीधराश्रमस्थां श्री गुहनाथस्य पादुकां वन्दे ॥ 8.

वेदान्तकमलवल्लभविद्योत्पलसोमसंविदाकाराम् ।
अद्वैतभावसारां श्री गुहनाथस्य पादुकां वन्दे ॥ 9.

सहजावस्थासीमां सच्चित्सुखशुद्धबुद्धसर्वस्वाम् ।
सकलाध्यासनिरासां श्री गुहनाथस्य पादुकां वन्दे ॥ 10.

वर्णाश्रमाद्यतीतां जीवन्मुक्तौघमान्यविभवार्थाम् ।
ललितापीठनिवासां श्री गुहनाथस्य पादुकां वन्दे ॥ 11.

गुहावासमीशं गुणातीतमूर्तिं गणाधीशपूर्वप्रपूज्यं सुभक्त्या ।
गुहाऽकार माश्रित्य तत्ज्ञानदं तं गुहानन्दनाथं गुरुं वै भजेहं ॥ 12.

अनाद्यन्तरूपं यदादित्यरूपं तदादित्यमूर्तिंप्रभिद्यव्रजंतं ।
यदात्मप्रकाशप्रदानैकनिष्ठं सदा तद्गुरुं तं सुभक्त्या भजेऽहं ॥ 13.

प्रकाशस्वरूपं परव्योमरूपं परातश्च पूर्वं परावद्भिभाव्यं ।
प्रकाशेत्यधाऽनन्द नाथेतिचाऽख्यापरं तं गुरुंवै नतोस्म्यानतोस्मि ॥

॥ श्री महाषोडशीमातृका स्तोत्रम् ॥

श्रींबीजपरमरूपां शृंगाररसप्रभावचिल्लहरीम् ।
श्रीशिवकामीनाम्नीं कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 1.

ह्रींकारपञ्जरशुकीं हृल्लेखाख्यप्रणवसहजलक्ष्यार्थाम् ।
हळक्षत्रिकोणमध्यां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 2.

क्लींकारबीजरूपां कृष्णारुणशुक्लत्रिगुणसीमान्ताम् ।
कामेशविमृशरूपां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 3.

ऐंबीजवाग्भवाख्यां अ इ अंकारादि निगमशिखरस्थां ।
आर्यापल्लविताख्यां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 4.

सौः कारशक्तिबीजां सोमार्कानलमंडलाधिष्ठाम् ।
सौभाग्यमंत्रलक्ष्यां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 5.

ओंकाराम्नयाद्यां सोहं हंसशिवाख्यमनुलक्ष्याम् ।
शब्दार्थलोकरूपां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 6.

ह्रीं द्वादशान्तविभवां गुरुमनुचक्रप्रपंचस्वोपास्याम् ।
हंसस्य हंसरूपां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 7.

श्रीसद्गुरुरूपधरां श्रीशिवकामेशवामसौन्दर्याम् ।
श्रीकांचिमध्यनिलयां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 8.

पंचार्णवाग्भवमुखीं पंचब्रह्मोपरिस्थचिच्छक्तिं ।
पंचोपचार तृप्तां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 9.

हसकहलह्रीं लक्ष्यां अहमाकाराख्यसिद्धकामकलां ।
हयमुखदेवैस्सेव्यां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 10.

चतुरार्णशक्तिकूटां सकलह्रीमित्यखंडसंविदेकरसां ।
मुक्तिस्वरूपसीमां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 11.

सौभाग्यहृदयरूपां सौःकाराभिन्नपरात्मिकां शक्तिं ।
आभासजीवसाक्षिं कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 12.

ऐंद्रपददायकांघ्रिं एमेन्त्रार्थस्वरूपचित्कलिकां ।
एलबिलसेव्यचरणां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 13.

कलईसबिन्दुरूपां कामेशप्राणरूपकामेशीं ।
ललितापदार्थलक्ष्यां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 14.

ह्रीमित्याम्नायनुतां ह्रींकारैकपरायणस्यहृद्रम्याम् ।
ह्रींकार पेटिकमणिं कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 15.

श्रीनाथगुरुगुहाख्यां षट्त्रिंशत्तत्वपीठमध्यस्थां ।
निगमांतविभववेद्यां कामाक्षीं नौमि कामपीठगताम् ॥ 16.

श्रीकामाक्षीप्रसादेन चिदानन्द कृतंत्विदं ।
षोडशीमातृकास्तोत्रं श्रीमद्देव्यै समर्पितम् ॥

மதிப்புரைக் குறிப்புகள்

ஸ்ரீநகர விமர்சம்

ஆர்யாத்விசதி என்னும் ஸ்ரீலலிதா ஸ்தவ ரத்தினம்

(விலை 0—12—0)

ஆர்ய தர்மம், கும்பகோணம்:—ஆர்யாத்விசதியை அடிமுதல் முடிவுவரையில் வாசிக்கும் ஸஹிருதயர்களுக்கு பிரும்மாநந்தானுபவம் ஏற்படுகிறது நிச்சயம். இது த்வநி ப்ரதானமாயுள்ள உத்தம காவ்யமாக அமைந்திருக்கிறது. இந்த ஸ்தோத்திரத்தில் பராசக்தியின் வாசஸ்தானமாகிய ஸ்ரீநகரம் வெகு விரிவாய் ஆரம்பத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அந்த நகரத்துக்கு 25 கோட்டைகளும், அவைகளுக்குக் காவலாளிகளுமிருப்பதாக இதில் சொல்லியிருக்கிறது. அக்கோட்டைகளுக்குள் சிந்தாமணி கிருஹமிருப்பதாகவும் 'அதற்குள் ஸ்ரீசக்ரமும் அதன் பிந்துபீடத்தில் காமேச்வர காமேச்வரிரூபமான பரதேவதை வசிக்கிறதாகவும் இதில் விவரிக்கப்பட் டிருக்கிறது. ஸ்ரீசக்ரவாஸிநீயான அம்பிகையின் பாதாதி கேசாந்த ஸ்தோத்திரத்துடன் இந்தஸ்தோத்திரத்தின் முடிவு ஏற்பட்டிருக்கிறது.

இந்நூல் வடமொழி தெறியாத தமிழ் மக்களுக்குப் பயன்படாதது பற்றி ஸ்ரீமான் ந. சுப்பிரமண்ய அய்யரவர்கள் தென்மொழியில் உரையொன்று எழுதி இத்துடன் சேர்த்திருக்கிறார்கள். ஸ்ரீமான் அய்யரவர்களின் மொழி பெயர்ப்பானது மூலக்கிரந்தத்தின் சுவை குன்று வண்ணம் அமைந்திருக்கிறது.

ஸ்ரீ நகர விளக்கச் சுருக்கத்தை ஆர்யாத்விசதியின் தாத்பர்ய ஸாரஸர்வஸ்மாகக் கூறலாம். ஆர்யாத்விசதியில் சொல்லியுள்ள ஸ்ரீ நகரக் கோட்டைகள், சிந்தாமணி கிருஹம், ஆவரண தேவதைகள், குரு மண்டலம், நித்யா தேவதைகள் இவைகளின் விவரணங்கள் எளிய தமிழ் நடையில் இவரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. இடையிடையே அந்த சந்தர்ப்பத்துக்கேற்றப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

உயர்ந்த தமிழுரையுடன் கூடின இவ்வுத்தமக் கிரந்தத்தை வெளியிட்ட ஸ்ரீமான் அய்யரவர்களின் பரிச்ரமத்தை நாம் ஸபலமாகச் செய்வதானால் ஒவ்வொருவரும் இதனை வாங்கி வாசிக்க வேண்டும். அசுத்தமின்றி அழகாக கிளேஸ் பேபரில் 122 பக்கங்களில் அச்சிடபட்ட இப்புஸ்தகத்

தைக் கையிலெடுத்தால் கீழே வைக்க மனம் வாராதென்பது நிச்சயம். பரதேவதா பக்தியும் பூர்ணமாய் உதிக்கும்.

பிரிய வாசகர்களே! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

ஆத்ம வித்யாபூஷணம் V. ஜகதீச்வர சாஸ்திரிகள்.
7—10—1937

*　　　*　　　*

சுதேசமித்திரன், சென்னை :— 9—10—1937

சித் சக்தி, சித்வித்யை முதலிய பெயர்களுள்ள ஸ்ரீவித்யோபாஸனை நம் நாட்டில் தொன்று தொட்டு மகான்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஜகத்குரு ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாள் பிருஹ்ம வித்யைக்கு இந்த ஸ்ரீ வித்யோபாஸனத்தை முக்கியமாக உபதேசித்திருப்பது அனைவரும் அறிந்த விஷயம். சக்தி பூஜை யென்பதைச் சாதாரணமாகக் கருதாமல் பிரஹ்மவித்தைக்கு இதைச் சாதனமாகக் கொண்டிருப்பதால் ஆஸ்திகர்கள் இதில் மிகுந்த ஆதரவுக்காட்டுவது மிகப் பொருத்தமாகும். இதில் ஸ்ரீ சக்கரம் வெகு விரிவாக விளக்கப்பட்டிருப்பதும், அதன் கருத்துக்கள் எடுத்துரைக்கப் பட்டிருப்பதும் ஒரு விசேஷமாகும்.

*　　　*　　　*

Hindu, Madras :—10-10-'37

The "Arya Dvisathi" of the Sage Durvasa, otherwise known as 'Lalitha Sthava Ratnam', is one of the classics of devotion. It is in praise of the Devi and describes the splendours and mysteries of Her gracious abode, Sri Nagara which has its counterpart in the microcosm of the human body. The editor has written an illuminating introduction. As Mr. K. S. Ramaswami Sastry points out in his foreword, Mr. Subramania Aiyer's object is to remove the misconception that "Sri Vidya or Sakti worship in its purest form is any way different from the Upanishadic Sadhanas".

கிடைக்குமிடம் :—

ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினீ சபை,
89, லாயட்ஸ் ரோட், இராயப்பேட்டை, சென்னை.

Liberty Press, Madras.

Sree Brahma Vidya Vimarśini Sabha

89, Lloyds Road, Royapettah,

MADRAS.

Objects :—

1. To hold periodical classes for the members to promote an insight into the study of Brahma Vidya.

2. To publish books on Brahma Vidya by Brahma Sri N. Subramania Iyer, President-Founder, and such others as are approved by him.

3. To help the members in the practical realisation of Brahma Vidya.

Membership :—Only those who have been proposed by one member and seconded by two other members shall be admitted as members by the Managing Committee who have the right to reject any application without assigning any reason.

Subscription :—Every member shall pay an annual subscription of Rs. 2/- in two equal instalments of Re. 1/- on or before the 31st January and 31st July of each year. Part of half year will be treated as full half year.

Management :—The executive management of the Sabha is completely vested in the President-Founder assisted by a committee consisting one Vice-President, one Honorary Secretary, one Treasurer, one member in charge of publication and one other member to be selected by the general body.

Sree Brahma Vidya Vimarsini Sabha

PUBLICATIONS.

	Rs. A. P.
1. Sree Nagara Vimarsam (Sanskrit & Tamil) (Durvasa's Lalitha Sthava Ratnam)...	0-12-0
2. Sree Guru Thathwa Vimarsam ...	0 -5-0
3. Varivasyárahasyam. (Sanskrit Text and Tamil Commentary).	In the Press
4. Kamakalà Vilasam (Sanskrit Text and Tamil Commentary).	,,
5. Pratyabhijnà Sutràs (with Text and Commentary in Sanskrit and Tamil).	,,
6. Parâ Pùjá Vàsaná Vimarsam (Tamil).	,,
7. Thripuròpanishad with Sri Ramananda's Commentary in Sanskrit	,,

Publications of the Sabha can be had from :—

The Manager,

Sree Brahma Vidya Vimarsini Sabha,

89, Lloyds Road, Royapettah,

MADRAS.